திராவிட மொழிகளில் ஆராய்ச்சி

1946 நாகபுரி அகில இந்திய கீழ்நாட்டுக் கலைஞரின் மகாநாட்டில்
திராவிட மொழிப்பகுதித் தலைமைப் பேருரை

S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L.,

தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

மதராஸ் பிரீமியர் கம்பெனி பிரசுரம்

...ாடு வெளியீடு

...ாட்வே, சென்னை

5.982

பதிப்பாசிரியர்

பி. ஸ்ரீ,

ரூபாய் ஒன்று

Printed at the Rajan Electric Press, G. T. Madras
For Q. H. M. S. 39—3-'47.

புலவர் போப்பையர்

தமிழுக்கு உழைத்த ஆங்கில அறிஞரின் வாழ்க்கையும் தமிழ்த்தொண்டும், தமிழ்ச்சுவை மிகுந்த நடையில் விளக்கப் பெறுகின்றன இதுவரை தமிழ்நாடு அறியாத பல செய்திகளையும் ஆசிரியர், ரெவரண்டு ஆ. அருள்தங்கையா சேகரித்துத் தந்திருக்கிறார். "தமிழ் மாணவர்" என்று தம்மைப் பெருமையுடன் சொல்லிக்கொண்ட போப்பையர் தமிழ் மாணவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வழிகாட்டி. விலை ரூ. 1—0—0

மஹாதேவ தேசாய்

நினைவு மாலை

கர்ம வீரரும், காந்தியடிகளின் வலதுகை போன்றவரும் இணையிலா எழுத்தாளருமான மஹாதேவதேசாய் 1942 ஹு ஆகஸ்டுமீ 14உ ஆகாகான் சிறையில் நம் சுதந்திரப் போரில் முதற்களபலிஆனரல்லவா? அவருடன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகிய ஸ்ரீ மஷ்ரூவாலா, ஸ்ரீ ஜி டி பிர்லா, ஸ்ரீ பியாரேலால், ஸ்ரீமதி ஸரோஜினிதேவி முதலிய பெரியோர் இவரது நினைவில் சமர்ப்பித்துள்ள மலர்களை அழகிய தமிழ் மாலையாகத் தொகுத்து வெளியிடுகிறோம். இது இதன் ஹிந்துஸ்தானிப் பதிப்புடன் ஏக காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—8—0

பிரசுரம்:
மதராஸ் பிரீமியர் கம்பெனி

விற்பனை உரிமை:
தமிழ்நாடு வெளியீடு
33, பிராட்வே, சென்னை.

திராவிட மொழிகளில் ஆராய்ச்சி

குறிப்பு

சென்ற 1946 அக்டோபர் மாதம் 19-ம் தேதியன்று அகில இந்தியக் கீழ்நாட்டுக் கலைஞரின் மகாநாடு நாகபுரியில் நிகழ்ந்தது. அம் மகாநாட்டில் பல துறைகளுக்குமுரிய தனிக் கூட்டங்கள் நடைபெற்றன. திராவிட மொழிகள், திராவிடரின் நாகரிகம் முதலியவற்றிற்குரிய துறை ஒன்றும் இந்த நாகபுரி மகாநாட்டில் புதிதாகத் தொடங்கப்பெற்றது. அதற்குத் தலைவனாக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்பொழுது (21-10-46) பேசிய தலைமையுரையின் மொழிபெயர்ப்பு சிற்சில மாற்றங்களுடன் இங்கே வெளியிடப்படுவது

எஸ். வையாபுரிப் பிள்ளை

20-12-46

தலைமை யுரை

ஆராய்ச்சியாளர்களே, பெண்மணிகளே, திருவாளர்களே,

முதன் முறையாக இப்பொழுதுதான் திராவிட மொழிகளின் துறை வகுக்கப்பட்டிருக்கிறது. என்னை இத் திராவிட மொழித் துறைக்குத் தலைவனாக நீங்கள் தேர்ந்தெடுத்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் எனக்கு அளித்துள்ள இக் கௌரவத்தை நான் பெரிதும் மதிக்கின்றேன். அதனை ஏற்றுக்கொண்டதனால், எனது கடமை மிகவும் பொறுப்பாக அமைந்துவிட்டது. எனினும் உங்களுடைய அன்பினையும், கூட்டுறவினையும் நம்பி என் கடமையை இனிது நிறைவேற்றத் துணிகின்றேன்.

திராவிட மொழிகளுக்குத் தனியாக ஒரு துறை அமைக்க வேண்டுவது வெகுகாலமாக உணரப்பட்ட ஓர் அவசியமேயாகும். ஆண்டுதோறும் இத் துறையில் உழைத்துவரும் அறிஞர்களின் தொகை வளர்ந்துகொண்டே வருகிறது. இத் துறையில் செய்யப்படும் ஆராய்ச்சியும் பலபடியாக விருத்தியாகிக்கொண்டே வருகிறது. இதுவரையிலும் ஆராய்ச்சி செய்துள்ளது மிகவும் சிற்றளவினதாயும், ஆராய்ச்சிக்குரிய பொருள் மிகவும் பேரளவினதாயும் உள்ளன. இவ் விஷயங்களில் ஒருசில பகுதிகளைப் பரிசீலனை செய்வதற்குங்கூட, ஒரு தனித் துறை இன்றியமையாததாகும். இம் மகாநாட்டில் மொழியாராய்ச்சி செய்யும் பொதுத் துறையில் இதற்குக் கொடுக்கக்கூடும் நேரம் ஒரு சிறிதும் போதாது. திராவிட மொழித் துறைபற்றி வரும் ஆராய்ச்சி யுரைகள் அனைத்தையும் படித்து வியவகரித்தாலன்றி, இத் துறையில் உழைப்பவர்கள் பயனடைய முடியாது. இவைபோன்ற காரணங்களால், திராவிட மொழித் துறை எனத் தனிப்பட்ட ஒரு துறை வகுக்க வேண்டுமென்று இம் மகாநாட்டின் நிர்வாகக் கூட்டத்தினர் தீர்மானித்திருக்கிறார்கள். இத் தீர்மானம் செய்த இவர்களை நாம் மிகவும் பாராட்டவேண்டும்.

நாம் நமது தாய் மொழிகளை வெகுகாலமாகப் புறக்கணித்துவிட்டோம் என்பது மறைக்கமுடியாத ஓர் உண்மை. சில காலத்திற்குமுன்வரை, நமது கல்வித் திட்டத்தில் அவைகளுக்கு மிகவும் தாழ்ந்த இடந்தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அவைகள் இருக்கவேண்டுமிடத்தில் ஆங்கிலமொழி புகுந்து ஆட்சிபுரிந்து வந்தது. இப்பொழுதும் காலேஜ் கல்வியில் ஆங்கிலம் தான் தலைமை பெற்றிருக்கிறது. இதற்கு ஒப்புமையாக இந்நாட்டிற்

குரியவர்களான நமக்கு, நமது அன்னிய அரசாங்கத்தினர் அளித்திருக்கும் ஓர் தாழ்ந்தபடியான நிலையைக் கூறலாம். தேசிய விடுதலையின் வாயிலை அணுகியிருக்கும் இந்தக் காலத்துங்கூடக் கல்விப் பயிற்சிக்குக் கருவியான மொழி எது என்பது பற்றி மனக்கொதிப்புடன் பலரும் வாதித்து வருகிருர்கள். அன்னிய மொழியே தக்க கருவியாம் என்று போராடுபவர்களும் இல்லாமற் போகவில்லை. இது நம்முடைய லட்சியங்களினின்றும் நாம் எவ்வளவு தூரம் தவறி விழுந்துவிட்டோம் என்பதை நன்ருகக் காட்டுகிறது. நம்முடைய தாய்மொழிகளை நமது கல்வியில் ஒவ்வொரு துறைக்கும் முற்ற உதவுங் கருவியாக நாம் கொண்டாலன்றி, நமது மொழிகள் வளரமாட்டா; வளர்ந்துகொண்டே வரும் நமது தேவைகளுக்கு இவை முற்றும் உதவமாட்டா; அறிவு வளர்ச்சிக்கும் பயன்படமாட்டா. நமது மொழிகள் போஷணையற்று மெலிந்து, முடிவில் அழிந்துபோக நேரிடும். வேருெரு விஷயமும் இங்கே சிந்தித்தற்குரியது. நம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது நம்மனமும், மூளையும் வளர்ச்சியுற்றுவரும் பருவமாகும். அப் பருவத்தில் நாம் அருமையாகப் போற்றவேண்டிய சில ஆண்டுகளை அன்னிய மொழிகளைக் கற்பதிலே நாம் விரயஞ் செய்யவேண்டியதாய் முடிகிறது. நம்மில் பலருக்கும் அவ்வகை அன்னிய மொழிக் கருவி ஒரு பாரமாக ஏற்படுகிறது. அதன் மூலமாக நாம் பெறும் அறிவு உயிர்த் தத்துவம் அற்று, ஞாபக மாத்திரையாய் அமைந்து விடுகிறது; முற்றும் உணரப்படாமல், அறிவோடு அறிவாய் ஒன்றிப் பெருகாமல் போய்விடுகிறது. மேலைநாட்டுக் கல்விப் பண்பினுலும், ஆங்கில மொழிக் கல்வியினுலும் நாம் அடைந்துள்ள நன்மைகளை நான் சிறிதும் மறந்துவிடவில்லை. இப்போது நிகழும் தேசிய மறுமலர்ச்சி நமது மேல்நாட்டுக் கல்வியின் விளைவே என்று நான் உறுதியாய் நம்புகிறேன். இவ்வாறு சொல்வதனுல் நமது நன்றியறிவின் பொருட்டு எல்லாக் காலத்தும் மேலைநாட்டினர்க்கு நாம் அடிமையாய் இருக்கவேண்டும் என்று ஏற்படாது. சரீரத்தால் அடிமைப்பட்டிருப்பதைக் காட்டிலும், அறிவினுல் அடிமைப்பட்டிருப்பது மிகவும் கொடுமையானது. அடிமை வாழ்வு இயற்கை வாழ்வு அன்று. எவ்வளவு விரைவில் அதனை நீக்குகிருேமோ அவ்வளவு விரைவில் உலகமே நன்மையடையும்.

ஆராய்ச்சித் துறையிலுங்கூட நமது மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. இங்கே வடமொழிதான் தலைமை பெற்று விளங்குகிறது. இத் தலைமை பெரும்பாலும் நியாயமாகவே தோற்று

கிறது. பன்னூறு ஆண்டுகளாக இவ் வடமொழி நமது நாட்டில் எங்கும் பயிலப்பட்டு வந்துள்ளது. நமது தேசியக் கருவூலங்கள் எளிதில் யாரும் செல்ல இயலாத இம் மொழிக்குகையி னுள்ளே பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. மக்களுக்குரிய அறிவுத் துறைகள் பெரும்பாலும் இப் பண்டைமொழியிலே ஒருவாறு காணப்படுகின்றன. நமது நாட்டிலுள்ள இனத்தவர்களில் பெரும்பாலாரும் இம் மொழியில் நூல்கள் இயற்றி இதனை வளர்த்து வந்திருக்கிறார்கள். இப்போது உயிருடன் வழங்கிவருகின்ற மொழிகள் அனைத்தும் வளர்ந்து பெருகுவதற்கு இவ் வடமொழி பெரிதும் துணை புரிந்திருக்கிறது. பெரிய பூகண்டமாகிய நமது பாரத தேசத்தில் இது பொது மொழி என்னும் நிலையை அடைந்திருக்கிறது. கருத்துலகில் நம் இந்திய மக்களுக்குப் பண்டைக் காலத்தும் நடுக்காலத்தும் உள்ள எந்த நாட்டின் மக்களுக்கும் தாழ்வில்லாத ஓர் நிலையை அளித்திருக்கிறது. நமது வருங்கால முன்னேற்றத்திற்கு மிகவும் சிறந்ததோர் அடி நிலமாகவும் இது அமைந்திருக்கிறது. இந்தியர் என்ற நிலையில், புகழ்பெற்று விளங்கும் இப்பண்டை மொழியைக் குறித்து நாம் பெருமைப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

ஆனால், நாம் கவனிக்கவேண்டிய வேறு சில விஷயங்கள் உள்ளன. இப் பண்டைப் பெருமையானது எப்போதும் திரும்பத் திரும்பப் பழங் காலத்தையே நம்மை நினைக்கும்படியாகச் செய்கிறது. நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் வேண்டும் அளவு கருதுவதற்கு இது இடங்கொடுப்பதில்லை. வருங்காலத்து இனி வேண்டும் வினைவுகளை ஊன்றிப் பார்த்தால், இவ் வடமொழியறிவும் ஆராய்ச்சியும் அத்துணையாகப் பயன்படுவதில்லை என்றுதான் சொல்லவேண்டும். இப் பண்டைமொழியின் கண்கொள்ளாத பேரழகு இதற்கும் நமது நாட்டில் வழங்கும் மொழிகளுக்கும் உள்ள உண்மையான தொடர்பு விளங்கவொட்டாதபடி நம்மைக் குருடாக்கிவிடுகிறது. நமது நாட்டு மொழிகளின் பெருமையை உள்ளபடி உணரவொட்டாமல் செய்துவிடுகிறது. அறிவென்னும் மகோன்னத பர்வதத்தின் சிகரத்தை அடைந்துவிட்டதாக நம்மவர்களிற் சிலர் கருதிக்கொள்ளும்படி செய்துவிட்டது. 'சகல சாஸ்திர பாரங்கதர்' என்று சிலர் தம்மைக் கூறிக்கொள்வது இதனை உணர்த்துகிறது. இதை ஒரு ஆரோக்கியநிலை என்று சொல்லமுடியாது. கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நமது நாட்டிலும் பிற நாட்டிலுமுள்ள பேரறிஞர் பலர் இவ் வடமொழி பற்றிய ஆராய்ச்சியையே கண்ணுங் கருத்துமாய்ச் செய்து

வந்திருக்கின்றனர். வடமொழி ஒன்றில் மாத்திரம் இவ்வாறு கவனம் செலுத்துவது மொழியாராய்ச்சி என்ற சிறு துறையிலுங் கூட மிகவும் வருந்தத் தக்கதோர் பிழையாகும். எஸ்பெர்ஸென் (Jesperson) என்ற பேராசிரியர் தமது "மொழி, அதன் இயல்பு வளர்ச்சி, தோற்றம்" என்ற நூலில் கூறியுள்ளதனல் இது நன்கு விளங்கும். 'முற்காலத்தில் இருந்த மொழியாராய்ச்சி சாஸ்திரத்தின் ஒரு கல்வி முறை மாணவர்கள் வழக்கொழிந்த பாஷைகளை மட்டும் கற்றுவந்தமையாகும் .. பிற்பட நிகழ்ந்த மொழிகளின் வளர்ச்சியை அவ்வம் மொழிகளில் வல்லவர்களே ஆராய்ந்து வந்தார்கள். இவர்கள் ஒப்புமை-மொழி நூலுக்கு அப்பாற்பட்டவர்கள் எனவும், பொதுப்படையான பாஷா சாஸ்திரத்திற்கும் புறம்பானவர்கள் எனவும் கருதப்பட்டனர். ஆனல் உண்மையில் இவ் இரு துறைகளுக்கும் உரியவர்கள் என்றே இவர்களைக் கொள்ளுதல் வேண்டும். இவர்களது ஆராய்ச்சி, மொழியின் ஜீவிய சரிதத்தை அறிதற்கு, இறந்துபட்ட மொழியின் ஆராய்ச்சியைக் காட்டிலும் பெரிதும் பயன்படுவதாகும். இறந்துபட்ட மொழியையே முக்கியமாகக் கொண்டு ஒப்புநோக்கி ஆராய்ந்தவர் பாப் (Bopp) என்பவர். இவர் மேற்கொண்ட முறை அத்துணை சிறந்ததன்றும்' என்பது இவர் கருத்து.

எஸ்பெர்ஸென் பேராசிரியர் வழக்கொழிந்த பாஷைகளை ஆராய்ச்சி செய்வதனல் ஏற்படுகிற பாஷா சரித்திர உண்மைகள் குறைபாடுடையன என்றும், அவை திருத்தமடைவதற்கும் நிரம்புதற்கும் தற்காலத்து வழக்கிலுள்ள மொழி ஆராய்ச்சி அவசியமென்றும் கருதுகிருர். வேருெரு முக்கியமான விஷயமும் இங்கே மனங்கொள்ளத் தக்கது. வடமொழி பூரணத்தின் எல்லையை அடைந்துவிட்டது. இனிமேல் அது மேற்செல்ல வேண்டும் என்னும் அவசியமின்றி, அசையாத நிலைக்கு வந்துவிட்டது. அதற்கு வளர்ச்சி என்பது இல்லை. அதன் பயிற்சிப் பண்பு எல்லாக் காலத்திற்கு முரியதாய் நம் மனத்தை என்றும் பண்படுத்திக்கொண்டேயிருக்கும் பெருந் தகுதிவாய்ந்து நிலவும். இதில் தவிர, பிற பகுதிகளில் அதன் சீரிய நோக்கம் நிரம்பி முற்றுப்புள்ளி பெற்றுவிட்டது. ஆராய்ச்சிக்கென வளர்ந்து கிடக்கின்ற ஒரு பெருங் காடாகவே இன்று அது அமைந்துவிட்டது. அரிய பல திறப்பட்ட கருவூலங்களால் அது வளம் நிரம்பி, அதில் உழைத்துவரும் ஆராய்ச்சியாளர்க்கு எல்லையற்ற பணிக்குரியதாய் இயன்றுவிட்டது. ஆனல், அதனுடைய இயற்கையான உயிர்வாழ்க்கை முடிந்து விட்டது. இப்போது

அது வாழ்வது உயிரோடு உலவும் நமது தாய்மொழிகளின் மூல மாகத்தான். நமது தாய் மொழிகளின் உயிராற்றலைப்பெருக்கி அவற்றிற்கு உரங்கொடுத்துப் போஷணை செய்வது ஒன்றே இனி அவ் வடமொழி செய்யவேண்டும் சேவை. நமது தாய் மொழிகளின் பெருமை எதுவென்றால், அவை உயிர்த் தத்துவத் தோடு துடி துடித்துக் கொண்டிருப்பதுதான். அவைகள் உயி ரோடு முழுவாழ்வு வாழ்கின்றன. உயிருள்ள வரை வளர்ச்சிக் கும், மேன்மைக்கும் இடம் இருக்கிறது. உயிரோடு வழங்கும் இம்மொழிகளில் செய்யும் ஆராய்ச்சி மிகவும் பயனுடையதாக வேயிருக்கும். இவற்றை மேன்மேலும் நாம் அதிக உபயோக முள்ள கருவிகளாக அமைத்துக்கொள்ளலாம். கருத்துக்களை வெளிப்படுத்தும் கருவிகள் என்ற நிலையில் இவற்றின் நலத்தை மேன்மேலும் முதிரும்படியாகச் செய்யலாம். இவற்றின் பிற நலங்களும் பெருமைகளும் மேலும் மேலும் வளர்ந்து முற்றும் படியாகச் செய்யலாம். இவ்வாறு செய்யும் முயற்சியில் வட மொழி நமக்குப் பெருந்துணையாக இருக்கும் என்பதில் தடையில்லை.

வடமொழியிலுள்ள அளவற்ற நூற்செல்வங்களை உலகத் துள்ள ஆராய்ச்சியாளர்கள் பலரும் எப்பொழுதும் ஆராய்ந்து கொண்டேயிருக்கவேண்டும் என்பதை நான் மீண்டும் வற்புறுத் துகிறேன். இவ் ஆராய்ச்சி ஒருபொழுதும் புறக்கணிக்கற்பால தன்று. ஆனால், இவ் ஆராய்ச்சியினால் இந்தியக் கலையாராய்ச்சி கள் அனைத்தும் முடிந்துவிட்டன என்று நினைப்பது தவறு. மேலே குறித்த காரணங்களால், நமது தாய்மொழிகளையும் வடமொழியைப்போலவே ஆராய்ச்சி செய்தல் வேண்டும். வட மொழியைக் காட்டிலும் அதிகமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றுகூட நான் கூறுவேன். இம் மொழிகளை ஆராய்ந்து போற்றாமல் இருப்பது மிகப்பெரியதோர் பாபமாகும். இப்பாபம் இவற்றை வழங்கிவரும் மக்களையுங்கூட அழித்துவிடுவதற்கும் போதியதாகும். நம்மவர்களில் பலரும் இவ் உண்மையை உண ராமல் இருப்பது வியப்பைத் தருகிறது. நம்மில் ஒவ்வொருவரும் ஆராய்ச்சித் துறை ஒவ்வொன்றில்தான் திறம்பட உழைத்தல் இயலும். ஆனால், ஆராய்ச்சி என்னும் பெருநிலத்தின் எல்லைப் பரப்பு முழுவதையும் அறிவதோடு, அந்நிலத்தின் தராதரங்களை யும் உணர்வது இன்றியமையாததாகும். நீண்ட காலமாகப் பயிற்சியில் வந்த பழைய துறைகளினால் ஏற்படும் பயன்களைத் திருத்திப் பெருக்குதற்பொருட்டுப் புதிய ஆராய்ச்சித் துறை களைக் கண்டுகொள்வதும் நமது கடமையாகும். மேலும் நமது

தாய்மொழிகளும் அவற்றிலுள்ள நூல்களும் வளத்திலும் தொன்மையிலும் வட மொழிக்குச் சமமானவையாகும். தமிழ் மொழியை எடுத்துக்கொண்டால் இது மிகவும் உண்மை என்பது புலப்படும். இம் மொழியிலுள்ள இலக்கியம் கிறிஸ்து-அப்தத்தின் தொடக்கத்திலேயே தோன்றத் தொடங்கின. மொழியாராய்ச்சி என்ற கண்கொண்டு நோக்கினால், இம் மொழியானது திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் மிகத் தொன்மை வாய்ந்து பயிலப்பட்டதென்பதும், மிகவும் சொல்வளம் நிரம்பியதென்பதும், ஐயத்திற்கிடமில்லாதபடி மிகப் பழைய சொல்-வடிவங்களால் பல திறப்பட்டுச் செழித்து வளர்ந்துள்ளதென்பதும் நன்கு விளங்கும் என்று டாக்டர் கால்டுவெல் கூறியுள்ளார். கவிதையின் பெருமையை நோக்கினாலும், பழங்காலக் கல்வியாகிய செல்வத்தை நோக்கினாலும், கல்விப் பண்பின் பெருமையை நோக்கினாலும்; நமது மொழிகள் வடமொழிக்கு ஒரு சிறிதும் பிற்பட்டனவல்ல. இவற்றால் நமக்கு எய்தியுள்ள பெருமை மிகவும் நியாயமானதே யாகும்.

மேற்குறித்தனவற்றோடு பொருந்த, இப்பொழுது திராவிட மொழித்துறை ஒன்று இங்கே வகுக்கப்பட்டுள்ளது. நமது இந்திய அரசாங்கம் ஒரு புது வாழ்வு தொடங்குங் காலத்தே இது தோன்றியுள்ளமை இங்கே கவனிக்கத்தக்கது. இத் துறை வருங்காலத்து மிகவும் சிறப்பு எய்தியதாக விளங்கும் என்பதற்கு ஓர் அறிகுறி என்று இதனைக் கொள்ளலாம். நாட்டில் வழங்கும் மொழிகளின் உரிமையின் பொருட்டு முதன்முதல் போராடி வெற்றிக்கொண்ட இம் மாகாணத்திலே திராவிட மொழிபற்றிய துறையும் முதன்முதல் தோன்றியுள்ளது என்பது நமக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னே உயர்ந்த நிலையிலுள்ள ஒரு பெரியார் சென்னை ஸர்வகலாசாலைக்கு விஜயம் செய்தனர். இவரை அக் காலத்திலுள்ள வைஸ் - சான்ஸெல்லர் ஒவ்வோர் ஆராய்ச்சித் துறைக்கும் அழைத்துச் சென்றனர். மொழியாராய்ச்சிசெய்யும் துறைக்குவந்த பொழுது, இங்கே எவ்வகையான ஆராய்ச்சி செய்யப்படுகின்றது என்ற சிறிது ஆதுரத்துடன் வினவினர். அவருடைய மனத்தின் அடியிலே இத் துறையில் ஆராய்ச்சிக்கு இடமே யில்லை என்ற ஒரு கருத்தும், இத் துறைகள் கேவலம் அலங்காரத்தின் பொருட்டு வைக்கப்பட்டுள்ளன என்ற கருத்தும் இருந்தன என்பதை ஒருவாறு உணர்ந்தேன். நாட்டின் கல்வி வளத்திற்கும் பொருள் வளத்திற்கும் இத்

துறைகள் பயனற்றன என்றும் அவர் கருதியிருத்தல்வேண்டும். இக் கருத்துக்கள் உண்மையொடுபட்டன அல்ல என்றுஅவரைத் தெளிவித்தற்கு எனக்குச் சில நிமிஷங்கள் சென்றன. இப் பெரியாரை நமது நாட்டில் சர்வசாதாரணமாய்க் காணப்படும் ஓர் இனத்தவரின் பிரதிநிதி என்று நாம் கொள்ளுதல்வேண்டும். தாய் மொழி ஆராய்ச்சித்துறையைப் பற்றிய நமது கல்வியில் சிறந்த பலர்க்கும் கூட நம்பிக்கை பெரும்பாலும் இல்லை என்பதைக் காட்டுவதற்கே இந் நிகழ்ச்சியை இங்கு எடுத்துக் கூறினேன். நம்பிக்கையற்ற ஒரு துறையிலே உழைத்துவரும்படி நமக்கு விதிக்கப்பட்டுள்ளது. அதிகாரவர்க்கத்தினர்கள் மாற்றாந்தாய் போல் நின்று இம் மொழியாராய்ச்சித் துறையைப் புறக்கணித்து வருவதும், பொதுப்படவுள்ள அவநம்பிக்கையின் அறிகுறியே யாகும். இந்நிலைமையை மாற்றிப் பலரும் உண்மையியல்பை உணர்ந்து நம்பிக்கை கொள்ளும்படி செய்வது மிகவும் அவசியமாகும். எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக இவ்வாறு செய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு மொழியாராய்ச்சிக்கு நன்மை விளையும்.

பொதுப்பட இவ்வகை அவநம்பிக்கை உண்டாவதற்குக் காரணம் யாது என்று நாம் சிந்தித்தல்வேண்டும். சாதாரணமாகப் பொதுமனிதன் ஒவ்வொருவனும் தான் இம் மொழியாராய்ச்சியை மேற்கொண்டு முடிவுகளைத் துணிய வல்லமையும் தகுதியுமுடையவன் என்று கருதிக்கொள்ளுகிறான். இத் துறைக்கென்று தனிப்பட்ட தகுதிவேண்டுமென அவன் கொள்ளவில்லை. யாரேனும் ஒருவன் தான்தனிப்பட்ட தகுதியுடையவன் என்று முன்வருவானானால், அவன் அவ்வாறு கூறிக்கொள்வதற்கு யாதோர் உரிமையும் கிடையாது என்று அந்தப் பொதுமனிதன் நினைக்கிறான். இந் நினைவை மாற்றுவதற்கு ஒன்றும் இதுவரை செய்யப்படவில்லை. விஞ்ஞான சாஸ்திரம்பற்றிய துறைகளில் இவ்வாறு நினைப்பதற்கு அவன் துணியமாட்டான். ஏனெனில், அவனது அறிவின்மை வெட்ட வெளிச்சமாய்விடும். மொழியாராய்ச்சித் துறையும், விஞ்ஞானத் துறைகளும் ஒரே நிலையில் உள்ளன என்பது இப் பொதுமனிதனுக்கு நன்கு விளக்கப்படுதல் வேண்டும். மொழிஆராய்ச்சித் துறைகளிலுள்ள பொருள்கள் அனைத்தையும் வகுத்துக் காட்டி விளக்குவோமாயின், இத்துறையில் புகுவதற்குத் தனிப்பட்ட அறிவும் தகுதியும் பயிற்சியும் வேண்டும் என்பது புலனாம். ஆகவே, இத்துறையிலுள்ள பொருட்பரப்பின் பேரெல்லையையும், சிறு வரம்புகளையும், ஒருவாறுகுறிப்பிட எண்ணுகிறேன். இத்துறையிலே நிபுணர்களாகிய உங்களுக்கு நான் கூறுவதில் புதுமையாக ஒன்றும் இருத்தற்கு இடமில்லை.

மொழிபற்றிய ஆராய்ச்சிகளை இரண்டு பகுப்பாகப் பகுக்கலாம்; மொழி பற்றியது, இலக்கியம் பற்றியது, என. சிறப்பு முறையில் உள்ள மொழியாராய்ச்சியை மொழியாராய்ச்சிப் பொது என்றும், திராவிட மொழி ஆராய்ச்சி என்றும் இருகூறுபடுத்துதல் தகும். பிற்கூறியதுதான் நாம் மேற்கொண்டுள்ளதாகும். மொழியாராய்ச்சிப் பொதுவில் மொழிகளின் தோற்றம், மொழிகளின் பாகுபாடு, அவற்றின் குடும்பம், மொழிகளின் பரப்புநிலை விளக்கம் (atlas), மொழித்தொடர்பு பற்றிய மானஸ சாஸ்திரம், மொழிப்பொருள் விளக்கம் முதலிய பல தனித் துறைகளும் உள்ளன. திராவிடமொழி ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டால் அதன் குடும்பத்தின்மூலம், அதன் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள், ஒப்பு நோக்கு மொழியாராய்ச்சி, ஒப்புநோக்கு இலக்கணம், மூலத்திராவிட மொழியின் புனர்நிர்மாணம் முதலிய பலதிறப்பட்ட பொருள்களும் அடங்கும். நமது மொழிகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டால், அதன் செம்மொழி வடிவம், அதன் சிதைவு மொழிகள், அதன் வழக்காற்று வடிவங்கள், அதன் பல திறப்பட்ட நிலை வேறுபாடுகள், அதன் அயல்நாட்டு யாத்திரை, அயலினத்தவர் முதலியோர்களால் அதற்கு ஏற்பட்ட விளைவுகள் என்பன முதலாகப் பல பொருள்பற்றி ஆராய்ச்சி நிகழும். செம்மொழி வடிவம் என்ற ஒரு துறையிலே, இலக்கணம், சொல் வரலாறு (வடிவ வரலாறு, பொருள் வரலாறு), வாக்கிய அமைதி வரலாறு, சொல்-தொகை வரலாறு, ஒலியியல் வரலாறு, உச்சாரண வரலாறு, நெடுங்கணக்கு வரலாறு, எழுத்துவடிவ வரலாறு முதலியனவாக ஆராய்ச்சி பலதிறப்படும். இலக்கணம் என்பது சொற்களின் ஒழுக்க முறையையும் பேச்சுவழக்கிலுள்ள நெறி அமைதியையும் உணர்த்துவதாகும். வரலாற்று நெறி இலக்கணம், விவரண நெறி இலக்கணம், ஒப்புநோக்கு இலக்கணம் முதலியன இலக்கணம் என்ற பகுப்பின்கீழ் அடங்கும். மொழிகளைப் பண்டைக்காலத்தன, நடுக்காலத்தன, தற்காலத்தன என்று பாகுபடுத்தும்பொழுது இவ் இலக்கணத் துறை மிகவும் விரிந்து ஆராய்ச்சியின் அளவும் பரந்துபட்டதாயிருக்கும். சொல்-தொகைகளைப் பல நிலைகளினின்று நோக்குதல்வேண்டும். இயற்கை உரிமைச்சொல், இரவற் சொல், கலப்புச் சொல், சங்கேதச் சொல், அதிகாரமுறைச் சொல், பத்திரிகைச் சொல், வழக்கொழிந்த சொல் முதலியன எல்லாம் சொல்-தொகையுள் அடங்கும். மக்களது இயற்பெயர், ஊர்ப்பெயர்களும் தனிப்பட்ட ஓர் ஆராய்ச்சித் துறையாகும். பலவகைப்பட்ட அகராதி இயற்று

தலும் பெரியதோர் துறையாகமுடியும். வரலாற்று முறை அகராதி, சொல்வரலாற்று அகராதி, கலைச்சொல் அகராதி, சங்கேதச் சொல் அகராதி, கடினச் சொல் அகராதி, ஒரு பொருட் பெயர் அகராதி, எதிர்ச்சொல் அகராதி, மரபுத்தொடர் அகராதி, தொடை அகராதி, தொகை அகராதி முதலியனவாக அகராதிகள் பலதிறப்படும். பொருட் பெயர் அகராதியும் இங்கே கொள்ளப்படுதல் வேண்டும்.

மேலே குறித்த முக்கிய ஆராய்ச்சிகளைத் தவிர, வேறு சில ஆராய்ச்சிகளும் நாம் செய்யவேண்டுவனவாய் உள்ளன. இங்கே மொழிமுறைப் பழமை யாராய்ச்சியை முக்கியமாகக் கூறலாம். இப் பழமை யாராய்ச்சி மூலத்திராவிட மொழியில் உள்ளனவாகக் கருதும் சொற்களையும், தொன்றுதொட்டு வழங்கும் புராதனக் கதைகளையும், தொன்றுதொட்டு வழங்கும் நாடோடிச் செய்யுட்களையும், அடிப்படையாகக்கொண்டு ஒப்புநோக்கு முறையில் நிகழ்வதாகும். மக்க ளினப்பிரிவு பற்றிய ஆராய்ச்சியும் இங்கே கொள்ளல் தகும்.

இனி, இலக்கிய ஆராய்ச்சிக்குச் செல்வோம். இங்கே தமிழ் முதலிய மொழிகளுக்குத் தனித்துரிய இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சியும். பல மொழிகளுக்குமுரிய இலக்கியங்களைப் பற்றிய ஒப்பு-நோக்கு ஆராய்ச்சியும் செய்தல்வேண்டும். ஒப்புநோக்கு-ஆராய்ச்சிக்கு உதாரணங்களாகத் திராவிட இலக்கிய ஆராய்ச்சி, இந்திய இலக்கிய ஆராய்ச்சி என்பனவற்றைக் கூறலாம். தனிமொழி இலக்கிய ஆராய்ச்சியில் முக்கியமாக நான்கு துறைகள் உள்ளன. அவையாவன, நூற்பதிப்புத்துறை, இலக்கிய மதிப்புத் துறை, இலக்கிய வரலாற்றுத் துறை, சரித்திரப் பொருள்களின் துறை என்பனவாம். இவற்றோடு, நூற்பட்டிகை (catalogue), பொருளடைவு நூற்பட்டிகை (bibliography) என்பனவற்றையும் நாம் சேர்த்துக்கொள்ளுதல்வேண்டும். இலக்கிய மதிப்பு ஆராய்ச்சியைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பிரித்துக்கொள்ளலாம். முன்னையதில் ஆராய்ச்சி விதிகள், நுண்கலையும் இலக்கியமும், மனோபாவனை, அமைப்புருவும் தொழிலும், நடை, அணி, யாப்பு, இலக்கியத்தின் சூழ்நிலை (இலக்கியமும் வாழ்வும், இலக்கியமும் சமுதாயமும் முதலியன), இலக்கியத்தின் நோக்கு (இயற்கை, உண்மை, லட்சியம், மக்கட்பண்பு முதலியன) என்பன எல்லாம் அடங்கும். பிற்கூறப்பட்டசிறப்பு இலக்கிய-மதிப்பில் தனிக்கவிஞன், தனிநூல், தனிப்பட்ட காலப்பகுதியின் இலக்கியம், தனிப்பட்ட நூல்வகை, இசை, கணிதம் என்பன போன்ற தனிப்பட்ட நூற்பொருள்;

இவை முதலியன அடங்கும். இனி, இலக்கிய வரலாற்றில் பல நூல்களுக்கும் பல ஆசிரியர்களுக்கும் காலம் துணியப்படுதல் அவசியம். இதனைத் தனிப்பட்ட ஒரு பகுதியாகக்கொள்ளலாம். இலக்கிய ஆசிரியர்களின் தனி வரலாறுகளும், ஆசிரியர் வரலாற்று அகராதிகளும் இங்கே கருதத் தகும். பின்னர், பொதுப்பட்ட இலக்கிய வரலாறுகள் இயற்றப்படுதல் வேண்டும். இதன் கண்ணே நூல்வகைகள், பண்டை, நடு, தற்காலம் இவற்றிற்குத் தனிப்பட உரிய இலக்கிய வரலாறுகள் முதலியவற்றைக் கொள்ளலாம். நூல் வகைகள் என்ற பகுப்பில் கவிதை, நாடகம், காவியம், கதை முதலியவற்றை யெல்லாம் அடக்குதல்வேண்டும். இலக்கிய அகராதியும் (Dictionary of literature) பெரிதும் பயன்படுவதாகும். நமது மொழிகளில் முக்கியமாகத் தமிழில், சரித்திரத்திற்குதவும் பொருட் கூறுபாடுகள் பல இருக்கின்றன. சிலாசாஸனங்கள், தாமிர சாஸனங்கள், தினசரிதைகள் முதலியவற்றை இங்கே குறிப்பிடலாம். இவற்றை நாம் கூடிய விரைவில் ஆராய்ச்சி செய்தல்வேண்டும். சரித்திர காலத்திற்கு முற்பட்ட வரலாறுகளைத் தெரிந்துகொள்ளப் புராண இதிகாசங்கள், நாடோடிப் பாடல்கள் முதலியன பயன்படும். இவைபற்றிய ஒப்புநோக்கு ஆராய்ச்சியும், பழமொழிகள், உலக வசனங்கள் முதலியன பற்றிய ஆராய்ச்சியும் தனிப்பட்ட ஓர் துறையாகும். வைத்தியம், ஜோதிஷம் முதலியவைபற்றிய தனிப்பட்ட பொருள்-வரலாற்று ஆராய்ச்சிகளும் இங்கே கருதற்குரியன. சமுதாய வரலாறு, நாகரிக வரலாறு, சமய வரலாறு மாந்திரிக வரலாறு, முதலியன எல்லாம் வெவ்வேறு தனித்துறையாகக் கொள்ளத்தக்கன.

இங்கே மிக முக்கியமான துறைகளை மட்டுந்தான் எடுத்துக் கூறியுள்ளேன். பின் சேர்த்துள்ள இரண்டு அனுபந்தங்களில் ஆராய்ச்சித் துறைகளிற் பெரும் பாலன விவரமாய்க் காட்டப் பட்டிருக்கின்றன.

இவற்றை நோக்கிய அளவில், மொழிபற்றிய ஆராய்ச்சி எத்துணை விரிவும் பரப்புமுள்ளதென்பதும், எத்துணைத் தகுதியும் பயிற்சியும் உள்ளவர்களால் அது செய்யப்படவேண்டும் என்பதும் விளங்கும். இவ் ஆராய்ச்சிக்கு எல்லைகாணுதல் அரிதாகும். இதன் ஒவ்வொரு துறையிலும் உழைப்பு மிகமிக, இன்னும் அதிகமான அளவில் உழைத்தற்குரிய பொருள்கள் உள்ளன என்பது அறியத்தகும். அறிவு மிகமிக, ஆராய்ச்சிப் பொருளும் வளர்ந்துகொண்டே செல்லுகிறது. இதனால், நமது அறி

யாமையும் நன்கு புலப்படுகிறது. ஆசிரியர் திருவள்ளுவர், "அறி தோறு அறியாமை கண்டற்ருல்" என்று கூறியது மிக ஆழ்ந்த தோர் உண்மை.

இனி முற்கூறிய பல துறைகளிலும் நாம் செய்து முடித்துள்ளனவற்றையும் இனி உடனடியில் செய்யவேண்டுவனவாயிருப்பனவற்றையும் சுருங்கச் சொல்லுகிறேன். தமிழ் ஒன்றுபற்றித்தான் நான் உறுதியாகக் கூறமுடியும். பின்வருவன பெரும்பாலும் தமிழைக் குறித்தனவேயாம். ஆனுல், இவை பிற திராவிட மொழி ஆராய்ச்சிகளுக்கும் பெரும்பாலும் ஒத்தனவாமென்றே கருதுகிறேன்.

மொழிபற்றிய பொதுவகை ஆராய்ச்சியில் மானஸிக தத்துவங்களைக் குறித்த அறிவு அவசியமாகும்; இலக்கியம் பற்றிய பொதுவகை ஆராய்ச்சியில் சௌந்தரிய சாஸ்திர உணர்ச்சியும், நுண்கலையுணர்ச்சியும் வேண்டப் படுவனவாகும். மொழியாராய்ச்சியை நோக்க, இலக்கிய ஆராய்ச்சி எளிதென்றே கூறலாம். ஆனுல், இவ்விலக்கிய ஆராய்ச்சியிலுங்கூட நாம் பெரிதும் முற்பட்டுவிடவில்லை. உண்மையில் நமது ஆராய்ச்சி மிக்க இளமைப் பருவத்தில்தான் இருக்கிறது என்று கூறவேண்டும். தமிழ்பற்றிய அளவில் இது மிகவும் உண்மை என்றே சொல்லுவேன். ஆனுல், ஒரு துறையில் நாம் சிறந்து விளங்குகிறேம்; அது நூற்பதிப்புத்துறை. சிறந்த கல்வியாளர்கள் பலர் இத்துறையில் உழைத்திருக்கிருர்கள். வித்வான் தாண்டவராய முதலியார், வேதகிரி முதலியார், சரவணப்பெருமாளையர், விசாகப்பெருமாளையர், ஆறுமுக நாவலர், ராவ் பகதூர் தாமோதரம் பிள்ளை, சுப்பராய செட்டியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலியவர்களை இங்கே குறிப்பிடலாம். இவர்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலிய முக்கியமான நூல்களை அருமையாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிருர்கள். தமிழ்மக்கள் இவர்களை மிகவும் போற்றிவரக் கடமைப்பட்டிருக்கிருர்கள். இத்துறையிலுங்கூட இன்னும் செய்யவேண்டுவன பல இருக்கின்றன. மேற்குறித்த நூல்களுக்கும் கம்பராமாயணம் முதலிய காவியங்களுக்கும் வரையறைசெய்த பாடங்களுடன், தற்காலத்துக் குரிய ஆராய்ச்சி யுபகரணங்களுடன், சிறந்த பதிப்புக்கள் இனிமேல்தான் வெளிவருதல் வேண்டும். அன்றியும் எண்ணற்ற நூல்கள் ஓலைச்சுவடிகளில் புதைந்து கிடக்கின்றன. இவ் ஓலைகள் எளிதில் அழியக் கூடியன. இங்ஙனம் அழிவுறுவதற்கு முன்பு இந்நூல்களையெல்லாம் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும். திரா

விடமொழிகள் பிறவற்றிலும் இங்ஙனமே பல நூல்கள் உள்ளன என்று தெரிகின்றேன். இப்பதிப்புத் துறையில் வல்ல கல்வியாளர்கள் பலர் ஒருங்குசேர்ந்து நூற்பதிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இனி இலக்கியமதிப்பு-ஆராய்ச்சியை எடுத்துக் கொள்வோம். இத்துறையில் இதுவரை சிறந்த பணி யாதும் நடைபெறவில்லை யென்றுதான் தோன்றுகிறது. இப்பொழுது சிலகாலமாக, திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார். பி. ஸ்ரீ. ஆச்சார்யா முதலானவர்கள் சில நன் முயற்சிகள் செய்து வருகிறார்கள். இங்கே ஒரு விஷயம் மட்டும் கூற விரும்புகிறேன். நாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம் என்ற உணர்ச்சியே நமக்கு இல்லை. சில நூற்றாண்டுகளுக்குமுன் மேனாட்டு மக்கள் இருந்த நிலைமையிலேயே இன்றும் நாம் இருக்கிறோம். தண்டியாசிரியர் முதலிய முற்காலத்து வடமொழி வாணர்களே இன்றும் நமக்கு வழிகாட்டிகளாய் இத்துறையில் நிலைத்துவிட்டார்கள். பரந்த அறிவோடுகூடிய புதுநோக்கு நமக்கு இயலாததுபோலத் தோன்றுகிறது. நம் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் முற்றிலும் வேறான நிலைமையிலே இயற்றப்பட்ட இரும்பு-விலங்குகளினால் நாம் பிணிப்புண்டு கிடக்கிறோம். தண்டியாசிரியரது பெருநூலைத் திருந்த அமைத்து முற்றுப்பெறச் செய்கிறோம் என்று தவறாகக் கருதி, அர்த்தமற்ற பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் வகுத்துவிட்டோம். இங்ஙனம் நுணுகி வகுப்பதிலே நம் அறிவைச் செலுத்தி இலக்கியச்சுவை யாராய்ச்சியாகிய கலையை முற்றும் இழந்துவிட்டோம். மேலை நாடுகளிற் சிறந்து விளங்கும் இலக்கிய மதிப்பீடு-முறைதான் நமக்கு உய்தியைத் தர வல்லது. அதுவே நமக்கு வழிகாட்டியாதல் வேண்டும். அப்படியானால்தான், மக்களினத்துக்கென்று அளிக்கப்பட்டுள்ள பேரின்பங்களுள் ஒன்றாகிய இலக்கிய-இன்பத்தை நாம் இழந்துவிடாமலிருப்போம். தண்டியாசிரியர் முதலிய அணிநூற் கர்த்தர்களுக்கு இலக்கிய மதிப்பீட்டுச் சரித்திரத்திலும் அலங்கார சாஸ்திர சரித்திரத்திலும் ஒரு கௌரவமான ஸ்தானம் உண்டு. இதனை நாம் மறந்துவிடலாகாது.

அடுத்தபடியாக, இலக்கிய வரலாறு எடுத்துக்கொள்ளத் தக்கது. இப்போதுள்ளனவற்றில் திரு. கே. எஸ். சீனிவாச பிள்ளையின் 'தமிழ் வரலாறும்,' திரு. எம். சீனிவாச அய்யங்காரின் தமிழாராய்ச்சி நூலும் (Tamil Studies), சிற்சில குறைகளிருப்பினும், பாராட்டிக் கூறத்தகுந்தன. இலக்கிய வரலாறு

பற்றி வேறு சில பொது நூல்களும், தனிப்பட்ட பகுதிகளை உணர்த்தும் சிறப்பு நூல்களும் உள்ளன. கன்னடத்தில் ராவ் பகதூர் நரசிம்மாச்சாரியாரும், தெலுங்கில் வீரேசலிங்கம் பந்துலுவும், மலையாளத்தில் உள்ளூர்ப் பரமேசுவர அய்யர் முதலியவர்களும், இலக்கிய வரலாற்றுத்துறையில் சில நல்ல நூல்கள் இயற்றியிருக்கிறார்கள்.

இத் துறையிலே முற்படச் செய்யவேண்டிய சில பணிகள் இருக்கின்றன. அவற்றுள் முதலாவது, இலக்கிய வரலாறுபற்றிப் பத்திரிகை முதலியவைகளில் வந்தனவற்றையும், நூல்களாக வந்தனவற்றையும் ஒருங்குதொகுத்தல். இரண்டாவது, இதுவரைபதிப்பிட்டு வெளிவந்தனவற்றிக்கும், வெளிவாராது சுவடிகளாக இருப்பனவற்றிற்கும் நூற்பட்டிகை இயற்றுதல். இங்கே சுவடிகளைத் தொகுத்துக் காப்பாற்றிப் பட்டிகை தயாரிப்பது குறித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது மொழிகள் ஒவ்வொன்றிற்கும் தனிப்பட ஒரு கழகம் அமைத்து ஏட்டுச் சுவடிகள் முதலியவற்றைத் தொகுத்தல் வேண்டும். இவ்வாறு நமது சென்னை அரசாங்கத்தினர் செய்யாமை பெரிதும் வருந்தத்தக்கது. இப் பணியைச் சென்னை அரசாங்கக் கல்லூரியின் வடமொழிப் பேராசிரியர்கள்மீது முன்பு சுமத்தியிருந்தார்கள். அவர்களுக்குத் திராவிட மொழிகளில் பயிற்சி கிடையாது; அவர்களது காலமும் கலாசாலை வேலையில் முற்றும் செலவழிக்கப்படுவது. சென்னை அரசாங்க நூல்நிலையப் பாதுகாப்பாளர்கள் என்ற நிலையில் அவர்கள் திராவிட மொழிகளுக்கும் சில சேவைகள் செய்திருக்கிறார்கள். இது அவர்களது பரந்த நோக்கத்தையும், கடமையுணர்ச்சியையும் தான் புலப்படுத்துகிறது. இப்பொழுது இப்பொறுப்பு ஒரு சிறு கழகத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இக்கழகத்தின் பாதுகாப்பாளருக்குத் திராவிடமொழிகளைப்பற்றிய உணர்ச்சி சிறிதும் கிடையாது. இக்கழகம் சிலகாலம் நீடித்திருக்குமானால் நூல்நிலைய வேலை செய்யப் பெறுமல் தமிழ்நாட்டிலுள்ள நூற் கருவூலங்கள் அனைத்தும் அழிந்துவிடும் என்று தோன்றுகிறது. பல இடங்களுக்கும் சென்று சுவடிகளைத் தேடித் தொகுக்கும் அலுவலாளர்களில் சிலர் தமிழ் நன்கு பயின்றவராக இருத்தல்வேண்டும். தமிழ்ச் சுவடிகள் அடங்கிய நூல்நிலையம், சுவடிகள் வாசிப்பதிலும் பதிப்பிடுவதிலும் வல்லவரான சிறந்த கல்வியாளரிடம் ஒப்புவிக்கப்படுதல் வேண்டும். இங்ஙனமே பிற திராவிட மொழிச் சுவடிகளுக்கும் ஏற்பாடு செய்

தல் அவசியம். முன்பு வடமொழிப் பேராசிரியரை நியமித்திருந்ததே திருப்திகரமான செயலன்று. இப்போது அதைவிட எத்தனையோ மடங்கு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சென்னை அரசாங்கத்தார் இதனை உடனே கவனித்துத் தக்க முறையில் நூல்நிலையங்களைப் பாதுகாத்துவருதல் இன்றியமையாதது. சுவடிகளைத் தேடித் தொகுப்பதையும் மிகவும் ஊக்கத்தோடு செய்வித்தல் வேண்டும்.

மூன்றுவதாக, பொருள்முறை-நூற்பட்டிகை ஒன்று எல்லா நூல்களுக்கும் இயற்றுதல். நூற்பட்டிகை முதலியன ஆங்கிலக் கழகத்திற்கு போஅஸ் (F. S. Boas) என்பவரால் இயற்றப்படும் 'வருஷாந்தர ஆங்கில நூல்கள்' என்ற தொடரினையும், ஆங்கஸ் மக்டானல்ட் (Angus Macdonald) என்பவரால் ஆங்கில மொழியிலுள்ள இலக்கியம் முதலியனபற்றித் தொகுக்கப்படும் 'வருஷாந்தரப் பொருள்முறை நூற்பட்டிகை' என்ற தொடரினையும் முன்மாதிரியாகக்கொண்டு இயற்றுதல் தகும். ஆனால், நம்முடைய பட்டிகையில் இலக்கியங்களோடு பிற நூல்களனைத்தும் தொகுக்கப்பெறுதல் வேண்டும். இவற்றை நாளிதுவரை பூர்த்தியாக்கி, இனிமேல் ஆண்டுதோறும் புது நூற்பட்டிகைகள் வெளியிடுதல் மேற்கொள்ளத்தக்கது. நான்காவதாக, நூல்களின் காலம் நன்கு பரிசீலனை செய்யப்படுதல். தமிழ் நூல்கள் பற்றிய அளவில், அவற்றின் காலவரையறையைத் துணிவதில் முற்காலத்திலுள்ள அறிஞர்கள் தவறான கொள்கையை மேற்கொண்டுவிட்டார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அதனை இப்பொழுது சீர்ப்படுத்துதல்வேண்டும். இலக்கியச் சான்றுகளை மதிப்பிடுவதுமட்டும் இதற்குப் போதியதாயிருந்தால், இது எளிதில் முடியக்கூடியதாகும். ஆனால், அவ்வாறு மதிப்பிடுவதோடு நின்றுவிடவில்லை. தமிழ் மக்களில் ஒரு பகுதியாருக்குத் திருக்குறள், சிலப்பதிகாரம் இவற்றின் காலம் சமயக் கொள்கைகளைப்போல் ஆகிவிட்டது. இதன் பொருட்டுத் தங்கள் உயிரையும்கூட இழந்துவிடுவார்கள்போல் தோன்றுகிறது! முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவாக இந்நூல்களைக் குறித்தால், அதற்கு அவர்களுடைய மனம் ஒப்புவதில்லை. பிற்காலத்தனவாயிருக்கக்கூடும் என்று யாரேனும் கூறினால், அவரைத் தமிழ்த் துரோகி என்று பட்டங்கட்டி விடுகிறார்கள். இதனால், விஷம் நிரம்பிய காற்று நமது நாட்டில் உலவி வருகிறது. ஆராய்ச்சியை நெரித்து விடுகிறார்கள். உண்மை தனது உயிருக்கே மன்றாடவேண்டியதாக இருக்

கிறது. ஆனால் ஆராய்ச்சியாள னுடைய கடமை தெளிவாகவே உள்ளது. உண்மையின் சார்பில் இரண்டொருவர் இருந்தாலும் அவர்களுடன் துணிந்து வாழ்வதே அவன் கடமை. அவ்வாறு செய்யாமற் போனால், அவன் அடிமை என்றே கருதத் தக்கவன்.

அடுத்து, சரித்திரப் பொருள்களை எடுத்துக்கொள்வோம். இங்கே கல்வெட்டு இலாக்காவைச் சார்ந்தவர்களும், பேராசிரியர் **பி. சுந்தரம் பிள்ளை, வி.** கனகசபைப் பிள்ளை, டி. ஏ. கோபிநாத ராவ், டாக்டர் எஸ். கிருஷ்ணசுவாமி அய்யங்கார், பி. தி. சீனிவாச ஐயங்கார், க. அ. நீலகண்ட சாஸ்திரியார், மு. இராகவையங்கார், ஏ. வி. வேங்கடராமய்யர், கே. ஜி. சங்கரஐயர், கவிமணி எஸ். தேசிக விநாயகம் பிள்ளை, ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், எஸ். சோமசுந்தர தேசிகர், டி. வி. சதாசிவ பண்டாரத்தார், தி. நா. சுப்பிரமணியம் முதலியோர்கள் நன்கு உழைத்துத் தமிழ்க்குத் தொண்டு செய்திருப்பது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்வாறே, தெலுங்குபற்றி டாக்டர் என். வேங்கடரமணய்யா முதலியோர்களும், கன்னடம் பற்றி ராவ்பகதூர் ஆர். நரசிம்மாச்சாரியார் முதலியோர்களும் பெரிதும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய 'திருஞானசம்பந்த சுவாமிகள் காலம்', மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை இயற்றிய '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்'; இவை யிரண்டும் பெரும்புகழ் பெற்றன. பேராசிரியர் க. அ. நீலகண்ட சாஸ்திரியார் எழுதிய 'சோழர்கள்' என்ற ஆங்கில நூல் தனிப்பட எடுத்துக்கூறும் தகுதிவாய்ந்தது. ஆனால், இன்னும் எத்துணையோ அளவு ஆராய்ச்சி நிகழ வேண்டுவதாயுள்ளது. கல்வெட்டு இலாக்கா அதிகாரிகள் தாங்கள் எடுத்துவைத்துள்ள கல்வெட்டுப் பிரதிகளைத் தமிழறிஞர்களுக்குக் கொடுத்து உதவுவதில் தாராள மனப்பான்மை யுடையவர்களாக இல்லை. பிரதி எடுத்துள்ள கல்வெட்டுக்களில் நூற்றுக்கணக்கானவை இன்னும் அச்சிடப் பெறவில்லை. ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் இன்னும் பிரதி எடுக்கவேண்டுவனவாய் உள்ளன. இக் கல்வெட்டுக்களை யெல்லாம் நன்கு பரிசோதித்து, குறிப்புகள் எழுதி, தென்னிந்திய மொழிகளில் வல்ல அறிஞர்கள் சீக்கிரத்தில் வெளியிடவேண்டும். கல்வெட்டுக்கள் தவிர, சரித்திர சம்பந்தமான காவியங்களும் தினசரிதைகளும் நம் நாட்டில் உள்ளன. இவையும் தக்கபடி ஆராய்ந்து வெளியிடப்படுதல் நலமாகும். புதுவை ஆனந்தரங்கம்பிள்ளை தமிழில் எழுதிவைத்

துள்ள 'தினசரிதை' இன்றுகாறும் வெளிவாராத புதை பொருளாகவே நமக்கு இருக்கிறது. தென்னிந்தியாவில் 18-ம் நூற்றுண்டில் நிகழ்ந்த வியாபார முயற்சிபற்றியும், அரசியலின் கதிபற்றியும் உள்ள பல விஷயங்களைத் தெரிவிக்கும் அருமையான இலக்கியமாக இத் தினசரிதை உள்ளது. அன்றியும், அந் நூற்றுண்டில் பேச்சுவழக்குத் தமிழ் இன்னவாறு இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு முக்கிய கருவியாகவும் இது அமைந்துள்ளது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பை அரசாங்கத்தினர் வெளியிட்டிருக்கின்றனர் (1904-20). தமிழ் மூலத்தை இன்னும் வெளியிடாதிருப்பது சிறிதும் தகுதியன்று. இதனையும் முயன்று கூடிய சீக்கிரம் வெளியிடுதல் பெரிதும் அவசியமாகும். இத் தினசரிதையைப் பாதுகாத்து வைத்திருக்கும் ரிகார்டு ஆபீஸ் அதிகாரிகள் இதனைப் பிரதி செய்து வெளியிடத் தமிழறிஞர்களுக்கு வசதி செய்து கொடுப்பார்களாயின் அதுவும் நலமாகும். இங்ஙனமே ஆனந்தரங்கம்பிள்ளையின் மகனுர் எழுதிவைத்துள்ள தினசரிதையையும் வெளியிடுதல் வேண்டும். நமது அரசாங்கத்தினர் விரைந்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் இது ஒன்றுகும்.

இலக்கியத் துறையில் இன்னும் ஒரே ஒரு விஷயம் பற்றித்தான் பேச எண்ணுகிறேன். அது ஒப்புநோக்கு இலக்கியப் பயிற்சியாம். திராவிட மொழிகளனைத்திற்கும் இது மிகவும் வேண்டற்பாலதாம். ஆங்கில இலக்கியப் பயிற்சியைக் குறித்துப் பேராசிரியர் டௌடன் (Dowden) கூறுவது இங்கே மிகவும் பொருத்தமுடையதாகும். 'ஐரோப்பிய இலக்கியங்களைப் பொதுப்பட அறிந்துகொள்வதுதான் இலக்கிய மாணவன் தன் பயிற்சியின் முதற்படியாகச் செய்ய வேண்டுவது. இப்பயிற்சியின் நோக்கமும், பரப்பும், நடைமுறையும் ஆசிரியர் ப்ரீமன் (Freeman) எழுதிய ஐரோப்பியச் சரித்திரப் பொதுக் கல்வியை ஒருவாறு ஒத்து அமைதல் வேண்டும். சாஸர் சம்பந்தமாய் பொக்காஸியோவைக் கூறுமிடத்தும், ஸ்பென்ஸர் சம்பந்தமாய் டாஸ்ஸோ, அரியோஸ்டோவைக் கூறுமிடத்தும், ட்ரைடன் அல்லது போப் சம்பந்தமாய் ப்வாய்லோவைக் கூறுமிடத்தும், கார்லைல் சம்பந்தமாக கெய்த்தேயைக் கூறுமிடத்தும், பொக்காஸியோ, டாஸ்ஸோ, அரியோஸ்டோ, ப்வாய்லோ, கெய்த்தே என்பவர்களை ஐரோப்பிய இலக்கியத்தின் பொதுப்போக்கில் எந்த இடத்தில் உள்ளவர்கள் என்பதை மாணவன் அறிதல் வேண்டும். அன்றியும் நமது நாட்டில் (இங்கிலாந்து நாட்டில்) உள்ள இலக்கியப் போக்கிற்கும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள

தொடர்பு இதுதான் என்று சரியாய் ஓரளவு தெரிந்துகொள்வதும் அவனது கடமையாகும்' என்றனர் இப்பேராசிரியர்.

இங்குக் கூறிய தகுதியை வைத்து நோக்கினுல், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற மூன்று மொழியிலுமுள்ள கல்வியாளர்கள் வடமொழி யிலக்கியம் பற்றிய அளவில் தகுதியுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனுல், தற்காலத்துள்ள தமிழறிஞர்களைக் குறித்து இவ்வாறு சொல்லமுடியாது என்று அஞ்சுகிறேன். தமது தாய்மொழியைத் தவிர, பிற திராவிடமொழிகள் பற்றிய அளவில் இவ் அறிஞர்களில் ஒவ்வொருவரும் அறியாமையால் பீடிக்கப்பெற்று, நிலையுணராதிருக்கின்ருர்கள் என்றுதான் சொல்லவேண்டும். வியாசர், வால்மீகி, காளிதாசன் என்பவர்களைப்பற்றியும், வள்ளுவர், கம்பன் என்பவர்களைப்பற்றியும், திக்கண்ணு, நன்னய்யா என்பவர்களைப்பற்றியும், பம்பா, ரன்னு, பொன்னு என்பவர்களைப்பற்றியும், எழுத்தச்சனைப் பற்றியும் அறியாதவனைத் திராவிட மொழிகளில் ஒன்றிலேனும் வல்லவன் என்று எவ்வாறு கூறமுடியும்? இவ் அறியாமை நமது நாட்டில் நீடித்திருக்கும்படியாக விடக்கூடாது. திராவிட இலக்கியங்களையும், இந்திய இலக்கியங்களையும் ஒப்புநோக்கிக் கற்றவனுடைய கல்வி யறிவு மிகவும் பரந்துள்ளதாயும் செழிப்புள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இவ் ஒப்புநோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மையாகிய திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்துவிடும். அச்சுவரை அரணுகக்கொண்டு நம் அறிஞர்கள் மறைந்துவாழ முடியாது. இவ்வகைக் கல்வியின்மேல் எழுந்த ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மையும், புதிய பெருமையும் ஏற்படும். நம்முள் ஒவ்வொரு மொழியாளரும் பிற திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த இலக்கியங்களைக் கற்று அனுபவித்துப் பரஸ்பரம் நன்மதிப்பைத் தேடிக் கொள்வாராக.

இனி, நான் மேற்செல்லுவதற்கு முன்பு ஒரு முக்கியமான பணியைக் குறித்துச் சொல்ல விரும்புகிறேன். இது மொழி பெயர்ப்புப் பணியாகும். இப் பணியை நமது கல்வியாளர்கள் மிகுதியாகக் கவனித்துத் தக்கபடி போற்றவில்லை. இத் துறையில் சில நூல்கள் நம்மிடையிலுள்ளன என்பது உண்மையே. ஜி. யூ. போப் பாதிரியார் திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிருர். வ. வே. சு. ஐயர் திருக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்திருக்கிருர்.

சங்க இலக்கியத்திலும் பல செய்யுட்களை ஆங்கிலத்தில் கனக சபைப் பிள்ளை, கே. ஜி. சேஷையர், பி. என் அப்புஸ்வாமி ஐயர் முதலியோர் நன்றாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர, வேறு சிலரும் இவ்வகை மொழிபெயர்ப்புப் பணியிற் புகுந்துள்ளார். இன்னார் செய்துள்ளன இத் துறையில் இவர்கள் இறங்காமலிருந்தால் நலமென்று கருதும்படியாகவே அமைந்துள்ளன. தமிழ்நூல்களை ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் மொழி பெயர்த்தல் வேண்டுவதே. இதைக்காட்டினும் வடமொழி, ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களையும் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தல் பெரிதும் வேண்டற்பாலதாம். வடமொழி மகாபாரதத்தைப் பல அறிஞர்களைக் கொண்டு தமிழில் மொழிபெயர்க்கச் செய்து, மகாமகோபாத்யாய ம. வீ. இராமானுஜாசாரியார் பதிப்பித்துள்ளார். இவ்வாறாகக் கருத்துக்களைப் பண்டமாற்றுச் செய்வது மிகுதியும் பயனுடையதாகும். மொழிபெயர்ப்பு அவசரமாகச் செய்யவேண்டிய பணிகளில் ஒன்றாகும். தகுதியுள்ள மொழிபெயர்ப்புக் கழகமொன்று நிறுவப் பெறவேண்டுவது அவசியம். மொழி பெயர்ப்புக் கழகம் நிறுவுவதில் நாம் காலம் தாழ்த்துதல் கூடாது. பிற திராவிட மொழிகளிலும் இம் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டு அறிஞர்கள் உழைத்து வருதல் அவசியம்.

இனி, இலக்கிய ஆராய்ச்சியினும் கடினம் என்று நான் முன் குறிப்பிட்ட மொழியின் ஆராய்ச்சியைப் பற்றிப் பேசுகிறேன். இவ் ஆராய்ச்சியில் இரண்டொரு துறைகளில் தவிர மற்றைத் துறைகளில் சிறிதும் நாம் முயற்சி எடுக்கவில்லையென்று பொதுப்படக் கூறிவிடலாம். இத் துறைகளில் மிக முக்கியமானவற்றை இங்கே குறிக்கிறேன். முதலாவது சொல்வரலாற்று ஆராய்ச்சி. தமிழில் இவ்வகை ஆராய்ச்சி நடைபெறுவதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. ஓர் உதாரணத்தால் தெரிவிக்கிறேன். 'மகரம்' வந்துள்ள சொல் தனித் தமிழ் என்ற கொள்கை தமிழ்-அறிஞர்களுக்குள் இருந்துவருகிறது. இக்கொள்கை பிழையாம் என்பது எளிதில் நிரூபிக்கலாம். வடமொழியிலுள்ள 'பீடா'

என்பதுதான் 'பீழை' எனத் தமிழில் வருகிறது. வள்ளுவரும்,

> பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
> பீழை தருவதொன் றில் (839)

என எடுத்தாண்டுள்ளனர். வடமொழியிலுள்ள 'சீர்ஷக' என்பதுதான் தமிழிலுள்ள சிகழிகை.

"பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை" (கலித்-54) எனக் கலித்தொகையில் வந்துள்ளது. வடமொழியிலுள்ள 'பல' என்பது தமிழில் பழம் என வழங்குகிறது.
2

"இடையோர் பழத்தின் பைங்கனி மாந்த" (புறம்-225) எனப் புறநானூற்றில் வந்துள்ளது. இவ் ஒலி-ஒப்புமைகளைக் கடைப்பிடித்துச் சென்று வடமொழியிலுள்ள 'க்ல' என்பது
3
தான் தமிழிலுள்ள கழகம் என்று ஒருவன் கூறுவனுயின், அவனை உடனே வடமொழிப் பைத்தியம் பிடித்தவன் என்று ஒதுக்கிவிடுகிறுர்கள். இக் கழகம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் பிற்பட்டதாகிய கலித்தொகையில்தான் முதன்முதல் வழங்கப்பட்டுள்ளது.

"தவலில்தண் கழகத்துத் தவிராது வட்டிப்ப"
என்பது கலித்தொகை 136-ம் செய்யுள். இங்கே 'சூது பொருகின்ற இடம்' என நச்சினுர்க்கினியர் பொருள் விரித்தனர். பாணினி ஆசிரியர் 'ஸூஹ' என்னும் வடசொல் சூதுபற்றியே வழங்கப்படும் என விதித்துள்ளனர். பாணினீயத்திற்கும் தமிழில் முதன்முதல் இச்சொல் வழங்கிய கலித்தொகைக்கும் சுமார் 8 நூற்ருண்டுகள் இடைப்பட்டிருத்தல் வேண்டும். இவைகளனைத்தும் யாராலும் மறுக்கமுடியாத உண்மைகளாயிருப்பினும், தமிழறிஞர்களில் பெரும்பாலாரும் 'கழகம்' என்பதைத் தூய தமிழ்ச் சொல் என்றே கருதிவருகின்றனர். இக் கருத்திற்கு மாறுபட்ட கருத்தைப் பிறர் குறிப்பிப்பதனையும் இன்னேர் பொறுப்பதில்லை. இவ்வகைச் சூழ் நிலையில் ஆராய்ச்சி நன்கு நடைபெறமாட்டாது என்பது சொல்ல வேண்டா. திராவிட மொழிகள் பிறவற்றில் இந்நிலை காணப்படவில்லை. இங்ஙனமிருப்பினும், தமிழில் சொல்வரலாற்று ஆராய்ச்சி ஒருவாறு நடைபெற்றுவருவது ஒரு நல்ல அறிகுறி என்றுதான் சொல்ல வேண்டும். காலஞ்சென்ற ஆர். சுவாமிநாதய்யர் தமிழ்ச்சொல் வரலாறுபற்றிச் சிறந்த ஆராய்ச்சி நூலொன்று எழுதியிருக்கிறுர். ஒரு சில இடங்களில் பிழையிருக்கலாம். ஆனுல், பிழை செய்வது மக்களியற்கைதான். இவ் வரலாறுகளில் பொதுமக்கள் உள்ளப் பாங்கைப் பின்பற்றிச் செல்லுதல் கூடாது. அவ்வாறு சென்ருல், சொல் வரலாறு உண்மையாயிருக்கமுடியாது. ஓர் உதாரணம் தருகின்றேன்: தமிழில் 'மயில்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இது வடமொழியிலுள்ள 'மயூர' என்

பதனேடு தொடர்புடையது. தெலுங்கு, கன்னட மொழிகளில் 'மயூர' என்ற சொல் ஒன்றே முற்காலத்தில் உள்ளமை இத் தொடர்பை வலியுறுத்தும். 'மயூர' என்ற வடசொல் ரிக்வேதத்தில் பயின்றுவந்துள்ளது. இங்ஙனமாகவும், மயில் என்பதைத் தனித்தமிழ்ச் சொல்லாகக்கொண்டு, மா-இல் எனப் பிரித்து, மா என்பது அழகு பொருந்திய சிறகு என்றும் இல் என்பது வெயில் மழை தாக்காதபடி அமைந்த ஒதுக்கிடம் என்றும் பொருள் படுத்து, ஒதுக்கிடம்போலுதவும் அழகிய சிறகினையுடையது எனச் சொற்பொருள் கண்டு ஓர் அறிஞர் வரலாறு அமைத்தனர். இச் சொல்லிற்கும் இது குறிப்பிடும் பிராணியின் இயல்பிற்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளதென்று கருதுதல் சொல்வரலாற்று முறையோடு மாறுபட்டதாகும். இப் பெயர் தோன்றிய காலத்து வாழ்ந்த மக்கள் மனநிலைக்கும் இவ் வரலாறு அதீதப்பட்டது. மனேபாவனை யொன்றையே துணையாகக்கொண்டு துணியும் சொல்வரலாறு உண்மையொடு பொருந்துவதாகாது. மூலத் திராவிடமொழியில் இச் சொல் இருந்ததெனற்குச் சிறிதும் சான்றில்லை. அன்றியும் 'மா' என்பதனை இவர் தமிழ்ச் சொல்லாகக் கருதினராதல்வேண்டும். ஆனல், உண்மையில், திருமகளை யுணர்த்தும் 'மா' என்னும் சொல் வடசொல்லே யாகும். திருமகளை அழகிற்கு இருப்பிடமாகக் கருதுவது நாம் அறிந்த தொன்றே. ஆகவே, மா-இல் என்பது சிறிதும் அழகற்ற ஒரு கலவைச் சொல்லாய் முடிகிறது. அது எக்காரணம்பற்றி மயில் எனக் குறுகிற்று என்பதும் வரலாற்றுமுறையில் உணர்த்தப் படவேயில்லை. மேல்நாட்டு அறிஞர் ஒருவர் 'மயில்' என்பதி னின்று 'மயூர' தோன்றியது எனக் கூறினர். இதனை உடன் பட்டால் காலமுறையைச் சிறிதும் கவனியாதவர்களாவோம். சொல்வரலாற்றில் கையாளப்படவேண்டும் நெறியினும் நாம் தவறியவர்களாவோம். பன்மொழி யாராய்ச்சிக்கு வேண்டும் தகுதிகளெல்லாம் பெரிதும் அமைந்த இம் மேனுட்டறிஞர் ஓரோ விடங்களில் இவ்வாறு விநோதமான வரலாறுகளைத் தருவது மிகவும் வருந்தத்தக்கது. வேறொரு மேல்நாட்டு மொழி யாராய்ச்சியாளர் வடமொழியிலுள்ள 'ஹநுமந்த' என்ற ஒரு சொல் 'ஆண்மந்தி' என்ற தமிழ்த்தொடரினின்றும் பிறந்ததாக எழுதியுள்ளனர். ஆண்மந்தி என்பதை ஆண்குரங்கு என்ற பொருளில் அவர் கொண்டிருத்தல்வேண்டும். ஆனல், மந்தி என்ற சொல் முற்காலத்திற் பெண்குரங்கிற்கே வழங்கப்பட்டது. பெண்பாற் பெயர்களை உணர்த்துமிடத்து, தொல்காப்பியர்

'குரங்குமுசுவும் ஊகமுமந்தி' (பொருள்-மரபு 68) எனக் கூறினர். பிற்காலத்தும் இதுவே வழக்காறு என்பது 'மந்தியுங் கடுவனும் மரங்கள் நோக்கின' (சித்திரக்கூட. 43) என்று கம்பராமாயணச் செய்யுளில் வருவதால் அறியலாம். ஆகவே, ஆண்மந்தி என்பது இயற்கையில் எத்தனை பரிகாசத்திற்கிடமோ அத்தனை அளவாக சொல்-தொடர் அமைப்பிலும் அது பரிகாசத்திற்கு ஏதுவாகும். இங்கே ஒன்று கூற விரும்புகிறேன். திராவிட மொழிகளில் சொல்லாராய்ச்சி செய்துவரும் மேனாட்டறிஞர்கள் ஒரு சிலரே யுள்ளார்கள். அவர்களுக்கு நமது மொழிகளின் மரபு முதலியன தெரியமாட்டா. இங்ஙனமாயினும் அவர்கள் செய்துள்ள மொழி வரலாற்றுத் தொண்டுகள் போற்றற்பாலனவாம். 'கால்டுவெல்', 'குண்டர்ட்', 'ப்ரௌன்', 'கிட்டல்' முதலியோர்களது பெயர்கள் நாம் உறுதியாக நம்பிக்கொள்ளுவதற்குப்போதியன. அவர்களது முடிபுகளிற் சில கொள்ளத் தகாதனவே. எனினும், அவர்கள் கையாண்டுவரும் முறையும், அவர்களது பரந்த அறிவும், விஷயங்களை நுட்பமாகக் கவனிக்கும் ஆற்றலும் நம்மால் பெரிதும் பாராட்டத்தக்கன. அவர்களைப் பின்பற்றி நாமும் உண்மையொடுபொருந்திய சொல்வரலாற்று-ஆராய்ச்சிகளைச் செய்வது நலமாகும்.

சொல்வரலாற்றோடு நெருங்கிய சம்பந்தமுடையது பெயர் வரலாற்று ஆராய்ச்சியாகும். இதில் இடப்பெயர்கள், மக்கட் பெயர்கள் முதலிய பலவகை ஆராய்ச்சிகள் அடங்கும். இடப் பெயர் வரலாற்றை எடுத்துக்கொள்வோம்: தமிழில் தலபுராணங்கள் என்று பேர்படைத்த காவிய நூல்கள் பல இருக்கின்றன. அவற்றில் இடப் பெயர் வரலாறுகளும் உள்ளன. ஆனால், அவற்றின் ஆசிரியர்கள் பெயர் வரலாற்றினைச் சரித்திரக்கண் கொண்டு நோக்காது, மனோபாவனை ஒன்றையே துணையாகக் கொண்டு, உண்மையான இடப்பெயர் வரலாற்றைத் தமது புராண கதைகளால் மறைத்துமூடிவிட்டனர். இப் புராணக் கற்பனைக் கதைகளைக்கொண்டே வெகுகாலமாகத் திருப்தியடைந்து வந்தோம். மிகச் சமீபத்தில்தான் உண்மை வரலாற்றை விளக்கும் முயற்சியை மேற்கொண்டு ஒரு நூல் தோன்றியுள்ளது. ஆனால், இதுவும் பௌராணிக நெறியையே பின்பற்றுகிறது; பல பிழைகள் செறிந்ததாகவும் உள்ளது. உதாரணமாக, திருநெல்வேலி என்ற ஊர்ப் பெயரிலே வேலி என்பது நில அளவைக் குறிப்பதென ஆசிரியர் எழுதியுள்ளார். தஞ்சை முதலிய பிரதே

சங்களில் இந்நில அளவு வழங்கப்பட்ட போதிலும் திருநெல்வேலிப் பிரதேசத்தில் இவ்வழக்கு எப்பொழுதும் இருந்ததில்லை. இங்கே வேலி என்ற சொல் காவலிடம் என்ற பொருளில்தான் பொதுவாய் வழங்குகிறது. இவ் ஊர்ப்பெயரிலும் இதுவே பொருள். நெல்லைப் புராணமும் இப் பொருளையே விளக்கிக் கதைகூறிச் செல்லுகிறது. 'திருப்பைஞ்ஞீலி' என்ற தலப் பெயரில் 'ஞீலி' என்பது 'வாழை' எனப் பொருள்படுமென்று ஆசிரியர் எழுதினர். இவர் ஆதாரங் காட்டாமற்போயினும், இப் பொருள் சிவஸ்தல மஞ்சரியில் கொடுக்கப்பட்டுள்ளதென்பது உண்மையே. ஆனல் தமிழில் 'ஞீ' என்ற எழுத்தில் தொடங்கும் சொல் கிடையாது. தொல்காப்பியத்தாலும் நன்னூலாலும் இது விளங்கும். எனவே ஞீலி என்பது நீலி என்பதன் போலி என்றே கொள்ளவேண்டும். இவ்விரு சொற்களுக்கும் வாழை என்ற பொருள் தமிழ் இலக்கியத்துள் ஓரிடத்திலும் வழங்கப்பெறவில்லை. நிகண்டுகளிலும் காணப்பெறவில்லை. பைஞ்ஞீலம் என்பது வாழை எனப் பொருள்படும் என்று தமிழ் லெக்ஸிகன் குறிப்பிடுகிறது. ஆனல், இதற்கும் ஆதாரமில்லை. சிவஸ்தல மஞ்சரியையே ஆதாரமாகக் கொண்டிருக்கலாம். பிராதேசிக வழக்கு (Local) என்று லெக்ஸிகனில் காணப்படுவது இச்சொல்லின் வடிவங்கொண்டே மறுக்கற்பாலதாம். சிவஸ்தல மஞ்சரியில் "வாழை" ஸ்தல விருக்ஷமாகக் காட்டப்பட்டுள்ளது. இத் தலம்பற்றிய தேவாரப் பதிகங்களில் ஓரிடத்தும் வாழை என்பது காணப்பெருமையால், மிகப் பிற்பட்ட காலத்தில், நீலி (ஞீலி) என்பதன் உண்மை வரலாறு மறைந்துவிட்டபொழுது, புதுவதாக ஒரு வரலாறு கற்பிக்கப்பட்டதாதல் வேண்டும். இதன் பயனுக, இவ்வாழை தோன்றியுள்ளதென எண்ணுதல் தகும். எனவே, இத் தலப்பெயர் பற்றிக் கல்வெட்டு முதலிய பிற கருவிகளின் உதவியைக்கொண்டு ஆராய்ச்சி நிரம்பச் செய்தாலன்றி, உண்மை வரலாறு அறிதற்கு இல்லை. 'ஞீலி' வாழை எனப் பொருள்படும் என்று கூறுவதெல்லாம் புராணக் கதையைப்பற்றிய புராணமேயாகும். முத்துப்பேட்டை என்பதற்கு முத்துக்குளித்த இடம் எனப் பூர்வ வரலாறு உரைக்கப்பட்டுள்ளது. இவ்வூர் கடற்கரையிலுள்ளதன்று; கடலுக்கும் இவ்வூர்க்கும் சுமார் 6மைல் தூரம் உள்ளதாம். பண்டைக்காலத்தில் இங்கே முத்துக்குளித்தனரென்பதற்கு யாதோர் ஆதாரமும் கிடையாது. தஞ்சை மான்யுவல் (Tanjore Manual) என்ற நூலை நோக்கினுல் இங்குக் கூறியதன் உண்மை அறியலாம். முத்து என்ற பெயரை நோக்கிய

அளவில், இங்ஙனம் வரலாறு கூறுதல் பௌராணிக நெறியேயாம். முத்து அல்லது முத்தையா என்பது தமிழ் மக்களுக்குரிய பெயர்களில் ஒன்றும். இப்பெயருடையோன் ஒருவன் நினைவுக் குறியாக இப் பேட்டை அமைந்திருத்தலும் சாலும். அல்லது அவன் நிறுவிய பேட்டையாகவும் இருத்தல் கூடும். உண்மை எதுவென்று அறுதியாக ஆராய்ச்சி செய்யப்பட்டாலன்றி இப் பெயர் வரலாற்றினை அறிதல் கூடாதாம். வெள்ளை என்ற சொற்குப் பலதேவன் என்ற பொருளும் தமிழில் உண்டு. ஆனால், வெள்ளையென்று தொடங்கும் பெயரையுடைய ஊர்களிலெல்லாம் பலதேவன் வணக்கம் இருந்தது எனக் கருதும்படி வரலாறு கூறுதல் பலதேவ புராணம் எழுதப் புகுந்தார் செயலேயாகும். தக்க ஆராய்ச்சியின்றி, தக்க நெறியைப் பின்பற்றாது எழுதிய நூல்கள் தளுக்கு நடையினால் உண்மை பொதிந்தன ஆகமாட்டா. மேலெழுந்த வாரியாகவுள்ள கல்வியினால் பிழைகள் பரம்பரை பரம்பரையாகப் பெருகிக்கொண்டேபோக இடமுண்டு; உண்மையாராய்ச்சி பெருகமாட்டாது. மேல்நாட்டறிஞர்கள் ஊர்ப் பெயர் முதலியன குறித்துச் செய்துள்ள ஆராய்ச்சி முறையை நாம் நன்கு அறிந்துகொள்ளுதல் வேண்டும். இங்கிலாந்தில் ஊர்ப்பெயர்க் கழகம் (Place-Name Society) வெளியிட்டுள்ள நூல்கள் மிகுதியும் பயன்படுவன. இவற்றைப் பின்பற்றித் தக்க படியான ஆராய்ச்சிகள் நன்கு நிகழ்தல் வேண்டும். இவை பெரிதும் நிகழ்ந்தபின்பு, ஊர்ப்பெயர்-அகராதி ஒன்று தொகுத்து வெளியிடுதல் மிகவும் பயன் தருவதாகும்.

இச் சிறுநூலைக் குறித்து இத்தனை நுட்பமாகத் துருவிப் பார்க்கவேண்டும் அவசியமில்லை. ஆனால் இது போன்றவற்றால் விளைந்துள்ள தீமையின் அளவை நோக்கி இவ்வாறு செய்ய நேர்ந்தது. இதற்கு வருந்துகிறேன். இங்கே குறித்த நிலைமையிருக்கும்வரை, சொற்பொருளை விளக்கி வரலாற்றுமுறையில் செவ்விதாக அமைந்த அகராதி ஏற்படுவதற்கு வழியேயில்லை. யாழ்ப்பாணத்து ரெவரெண்ட் ஞானப்பிரகாசர் இயற்றிவரும் சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதியில் இதுவரை இரண்டு பகுதிகளே வெளிவந்துள்ளன. மொழி நூலாராய்ச்சி தமிழில் எவ்வளவு இரங்கத்தக்க நிலையிலுள்ளது என்பதை இப் பகுதிகள் விளக்குகின்றன.

சென்னை ஸர்வ கலாசாலையின் ஆதரவில் வெளிவந்துள்ள தமிழ் லெக்ஸிகன் வரலாற்று முறையில் அமைந்த அகராதி

யன்று. ஆனால், அது எப்பொழுதும் யாவரும் போற்றத்தகும் சிறந்த நிலையிலுள்ளது. முன் அகராதிகளில் ஆதாரமாகக் கொள்ளப்பட்ட நூல்களனைத்தும் மீண்டும் நன்கு பரிசோதிக்கப் பட்டுள்ளன. புதிய ஆதார நூல்கள் நன்கு பயன்படுத்தப்பட் டுள்ளன. சொற்களின் பொருள்களைக் கிரமப்படுத்துவதிலும், சொற்பொருளின் இயல்பை ஆங்கிலத்திலும் தமிழிலும் வரை யறுப்பதிலும், சொல்வரலாற்றுக்கு உபகாரப்படும்படி திராவிட மொழிகள் பிறவற்றிலுள்ள கிளைச் சொற்களை எடுத்துக்காட்டு வதிலும், மேற்கோள்களால் பொருளை விளக்குவதிலும் இந்த லெக்ஸிகன் முந்திய அகராதிகளைவிடப் பன்மடங்கு மேம்பட்டு விளங்குகிறது. சமீபகாலத்தில் வெளிவந்துள்ள நூல்களுள் இத்துணை அளவாகப் பெருமைவாய்ந்துள்ளதொரு நூலைக் காணு தல் இயலாது. இதில் குறைபாடுகள் உள்ளன என்பது உண் மையே. அவை காலக்கிரமத்தில் திருந்தவேண்டுவனவாயுள் ளன. நிற்க. லெக்ஸிகனைப் பின்பற்றிய அகராதிச் சுருக்கம் ஒன்றும் இன்றியமையாததாகும். சென்னை ஸர்வகலாசாலையார் இதனை விரைவில் எழுதிமுடித்து வெளியிடுவதற்குவேண்டும் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். பலவகையான விஞ்ஞான சாஸ்திரங்களுக்கும், கலைகளுக்கும் உரிய அகராதி ஒன்றும் மிக விரைவில் இயற்றப்படவேண்டும். பள்ளி மாணவர்களுக்குப் பயன்படுமளவில் இதனை இயற்றுதற்குச் சென்னை அரசாங்கத் தார் சென்ற ஆறு ஆண்டுகளாக முயன்று வருகின்றனர். இது முற்றுப்பெறும் நிலையில் உள்ளது. முன் குறித்துள்ள அகராதி வகைகளில் மற்றை அகராதிகள் எவையும் தொடங்கப்பெறவே யில்லை. அவைகள் அனைத்தும் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியனவாம். அறிஞர்கள் பலர் சேர்ந்த கழகம் ஒன்றை நிறுவி அவற்றை இயற்றுதல் நலமாகும். இங்கே, தெலுங்கு மொழியில் வெளியிடப்பட்டு வரும் சூரியராய நிகண்டு என்னும் அகராதியையும், கன்னடத்தில் மைசூர் அரசாங்கத்தார் வெளியிட முயன்றுவரும் அகராதியையும் பற்றிக் கூறுதல் இயை புடையதாகும். திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையார் மலையாளம் லெக்ஸிகன் ஒன்று வெளியிடக் கருதியிருக்கிறார்கள்.

இனி, வேறொரு துறைக்குச் செல்வோம். மொழியினங்களுள் மூலத் திராவிடமொழி எதனைச் சார்ந்தது என்பதை விசாரித் துத் துணிவதில் பற்பல ஐயப்பாடுகளும், இடையூறுகளும் உள் ளன. கால்டுவெல் ஆசிரியர் சித்திய (Scythian) மொழியோடு

இம்மொழியைத் தொடர்புபடுத்தினர். நம்மவர்களில் பெரும் பாலாரும் இதனையே முடிந்த முடிபெனக் கருதிவருகிருர்கள். கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்புநோக்குப் பயிற்சியை முதன்முதலில் தொடங்கியவர் என்பது உண்மையே. அன்றியும் திராவிட இனத்தைச் சார்ந்த மொழிகளுள் ஒன்றற்கொன்றுள்ள தொடர்பினை அறிந்து அவைகள் ஓரினத்தைச் சார்ந்தவை என்று நிறுவியவரும் அவரே. அவருக்கு முன்பு, அவை ஓரினத்தைச் சார்ந்தனவாகலாம் என்று பொதுப்படக் கூறிவந்தனரேயன்றி, மொழி நூல் முறையில் எவரும் தெளிவுபடுத்தியவர்களில்லை. கால்டுவெல் ஆசிரியர் மிகச் சிறந்த கல்வியாளர்; மொழியாராய்ச் சியில் மிகவல்லவர்; பேராற்றல் படைத்தவர். அவருடைய பெயர் திராவிட மொழி அறிஞர்களால் எல்லாக் காலத்தும் நன்றியறித லுடன் போற்றுதற்குரியதே. ஆனல், அவர் எடுத்துக்கொண்ட துறையில் ஆராய்ச்சிக்கு இனி இடமில்லை என்று எண்ணுதல் கூடாது. சித்திய மொழித் தொடர்பை அவர் கூறும்பொழுது அவரே துணிவு பிறக்கும்படி தெளிவுபடுத்தவில்லை. ஒலி ஒப்புமை களால் மயங்கிவிடுவதற்கு இடமுண்டென்று அவரே கூறி யுள்ளார். இனிமேல் இன்ன நெறியில் ஆராய்ச்சி செல்வதாக லாம் என்பதை அவர் காட்டினர் என்ற அளவிலேயே அவரது ஆராய்ச்சியை நாம் கொள்ளுதல் வேண்டும். மாக்ஸ்முல்லரும் அவரது முடிவோடு ஒத்ததொன்றையே கொண்டனர். ஆனல், சித்திய மொழி என்பதற்குப் பதிலாக துரேனியமொழி என்ற னர். இரண்டும் ஒன்றே.

இக் கொள்கையை பி. ஹூன்வால்வி என்பவர் மறுத்து, மறுப்பிற்குரிய காரணங்களை மிக்க திறமையுடனும் தெளிவுட னும் எடுத்து எழுதினர். டாக்டர் ஸ்டென் கொனே தமது 'இந்தியமொழிகளின் ஸர்வே'யில் (தொகுதி IV பக். 282: 1906) 'திராவிடமொழிகளை இந்தியாவிற்கு வெளியேயுள்ள மொழிக ளோடு இணைக்க இதுவரை எடுத்த முயற்சிகள் ஒன்றும் பயன் படவில்லை. இவைகளைத் தனிப்பட்ட ஒரு குடும்பத்தின என்று கொள்ளுதலே நேரிதாகும்' என்று கூறினர். 1925-ல் கால்டு வெல் ஆசிரியரின் கொள்கை F. O. ஸ்ரேடர் என்பவரால் மீண் டும் பரிசீலனை செய்யப்பட்டது. இவர் திராவிட மொழிகளையும் பின்னே-அக்ரியன் முதலிய யூரல் பிரதேசத்து மொழிகளையும் ஒப்பிட்டனர். ஒப்பிட்டு, இருவகை மொழியினங்களும் தொடர் புடையன என்று துணிந்தனர். இக் கொள்கையைக் கண்டித்து

E. லூயி என்பவர் ஓர் மறுப்பு விடுத்தனர். இம் மறுப்புப் பெரும் பாலாராலும் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், சில காலங் கழித்து ஹெவிஸி என்ற ஹங்கேரி அறிஞர் முண்டா அல்லது கொலேரியன் மொழிகளும் பின்னோ-அக்ரிய மொழிகளும் தொடர்புடையன என்று காட்டுதற்கு முயன்றனர். இத்தொடர்பு நிறுவப் படுமாயின், திராவிடமொழிகளும், கொலேரிய மொழிகளும் சம்பந்தமுடையன என்று நிரூபிக்கப்படலாம். ஆனால் முற்குறித்த தொடர்பு நிரூபிக்கப்படவில்லை. பேராசிரியர் எஸ். கே. சட்டர்ஜி 'மூலத்திராவிட மொழியினர் மேலே நாடுகளிலிருந்து வந்தவர்களாதல் வேண்டும். அவர்கள் தாயகம் மத்தியதரைக் கடற் பிரதேசத்தின் கிழக்கில் இருந்ததாதல் வேண்டும். ஆசியாமைனரிலிருந்த பண்டை லீக்கியர்கள் க்ரீட் தேசத்தில் குடியேறித் தங்களை த்ரும்லி என்று கூறிக்கொண்டனர்' என்று எழுதியிருக்கின்றார். த்ரும்லி என்பதும் த்ரமிளர் என்பதும் ஒன்றெனக் கொண்டனர். இதனால் திராவிடர்கள் கிரேக்கர் காலத்துக்கு முற்பட்டிருந்த க்ரீட் மக்களோடு தொடர்புடையவர்கள் என்று ஊகிக்கலாம். இவ்வகையான ஜாதித் தொடர்பிலிருந்து மொழித் தொடர்பும் இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இவ்வகை ஆராய்ச்சியின் இயல்பை நோக்கும்போது, இதனை மக்கள்-வகுப்பு ஆராய்ச்சியிலும் மொழி நூலாராய்ச்சியிலும் தக்க பயிற்சியும் திறமையும் உள்ளவர்களிடத்தே விட்டு விடுவதுதான் நலமென்று தோன்றுகிறது. திராவிடமொழி அறிஞர்கள் செய்யவேண்டும் பணி வேறு இருக்கின்றது. அது தான் மூலத்திராவிட மொழிக்கும் மற்றைத் திராவிட மொழிகளில் ஒவ்வொன்றிற்குமுள்ள சேய்மை அண்மைபற்றிய ஆராய்ச்சியாகும். மொழி - ஆராய்ச்சி முதிராது இளம் பருவத்திலிருக்கும்பொழுது, தமிழ் மொழியின் உதரத்திலிருந்து மற்றைத் திராவிட மொழிகள் பிறந்தன என்றும், தமிழ்தான் மூலத் திராவிடமொழி என்றும் நம்பி வந்தார்கள்.

'கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்'

என்றனர் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை.

இது மொழியாராய்ச்சி நெறிக்கு ஒத்ததோர் முடிபன்று. தமிழின் வேறுபட்டதாய், அதைக்காட்டிலும் மிக்க தொன்மை வாய்ந்ததாயுள்ள ஒரு பண்டைமொழி இருக்கவேண்டும் என்று கொள்ளல் மொழி நூல் முடிபிற்கு அவசியமாயிற்று. அவ்வாறு

கொள்ளவே, அம்மொழியின் குழந்தைகளாகிய திராவிட மொழிகளில் எது முற்படப் பிறந்தது என்பது பற்றித் திராவிட மொழி அறிஞர்கள் இப்போது போர் புரிந்து வருகிறார்கள். சென்னை ஸர்வகலாசாலையில் பணி புரிந்து வந்த எனது நண்பர் ஸ்ரீ கே. ராமகிருஷ்ணய்யா மூலத்திராவிட மொழியிலிருந்து முதன்முதல் பிரிந்தது தெலுங்கு மொழிதானென்றும், ஆகவே, அதுதான் தமிழ் மொழியைக் காட்டிலும் மிக்க தொன்மை வாய்ந்ததென்றும் கருதுகிறார். மலையாள மொழியைச் சார்ந்த அறிஞர்கள் அவர்களுடைய மொழிதான் இங்குக்குறித்த தொன்மைக்கு உரிமையுடையதென்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால், தமிழின் முற்பிறப்பும் தொன்மையும் தக்க காரணங்களால் நிறுவப்பட்டுள்ளன. கால்டுவெல் ஆசிரியர் கூறும் இக் கொள்கையை மறுப்பது எளிதன்று. எனினும், பிற திராவிட மொழிகளுக்குரிய நமது சகோதரர்கள் இவ் உரிமையை மேலிட்டுக் கொண்டாடுகிறார்கள் என்பதையும், ஆராய்ச்சி இன்னும் இதுபற்றிச் செய்யவேண்டும் என்பதையும், நாம் மனத்தில் பதிய வைத்தல் வேண்டும். இக் கேள்வியை விருப்பு வெறுப்பின்றி நடுநிலையிலிருந்து ஆராய்தல் அவசியமாகும்.

இதனைக்காட்டிலும் மிக முக்கியமான கேள்வியொன்று மொஹஞ்சொதரோ, ஹரப்பாப் பிரதேசங்களில் அகழ்ந்து கண்டெடுக்கப் பெற்றவற்றால் விளைந்து விட்டது. சிந்துநதி நாகரிகம் திராவிடருக்கு உரியதுதான் என்று வலுவாக வாதிக்கப்பட்டு வருகிறது. இந்நாகரிகம் வேதகாலத்திற்கு முந்தியது என்றும், ஆரியர்கள் இந்தியாவிற்குள் புகுவதற்கு முன்புள்ளதென்றும் பெரும்பாலோர் ஒப்புவர். ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் சிந்துநதிப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் மூன்று இனத்து மக்களேயாவர். அவராவர் நிக்ரோவர், ஆஸ்திரோ-ஆசியர், திராவிடர் என்பவர்களாம். இவர்களுள் நிக்ரோவர் பழங் கற்காலத்துள்ள நாகரிக நிலையில் இருந்தவர்கள். ஆஸ்திரோ-ஆசியர்கள் புதுக் கற்காலத்து நாகரிக நிலையில் உள்ளவர்கள். திராவிடர்கள் தாம் நகரங்கள் இயற்றி அமைதியான வாழ்வுக்கு உரிய நாகரிகத்தை அடைந்தவர்கள். சிந்துநதிப் பிரதேசத்து நாகரிகம் மிகச் சிறந்தது. இங்கே நன்றாக அமைக்கப்பட்ட நகரங்களும், பல உப்பரிகைகளோடு செங்கற்களால் இயற்றப்பட்ட வீடுகளும், பூமியின்கீழ் அமைக்கப்பட்ட சலதாரைகளும் இருந்தன. எழுதுதல் பலருக்கும் தெரிந்ததொரு கலையாக விளங்

கிற்று. மட்பாண்டங்கள் நன்ருக அலங்கரிக்கப்பட்டு,பலவகை யான முறைகளில் வர்ணம் பூசப்பெற்றிருந்தன. இறந்த மக்களைப் புதைப்பதிற் சில விசேஷ வழக்கங்கள் இங்கே இருந்தன. குழந்தைகளுக்குரிய பொம்மைகள் முதலிய நாகரிகவாழ்விற்குரிய பல சின்னங்களும் இங்கே உள்ளன. இவ்வளவு உயர்ந்த நாகரிகம் நிக்ரோவர்களுக்கும் ஆஸ்திரோ-ஆசியருக்கும் இருந்ததெனக் கொள்ளுதல் ஏலாது. அன்றியும், இந் நாகரிகம் மத்தியதரைக் கடல் - மேலை ஆசிய நாகரிகப் பண்போடு தொடர்புற்றதாகவும் காண்கிறது. திராவிடர்களும் மத்தியதரைக்கடற் பிரதேசத்துமக்களாவர் என்பது வேறுவகையாலும் அறியப்பட்டது. இவைகளையெல்லாம் நோக்குமிடத்து சிந்துநதிப் பிரதேசத்து நாகரிகம் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்துசேருமுன் திராவிடர்களால் அமைக்கப்பட்டதாம் என்ற முடிவு பெரும்பாலும் கொள்ளத்தக்கதே. இம்முடிவு முற்றும் உண்மைதான் என்பது மொஹஞ்சொதரோவில் காணப்படும் எழுத்துக்களை அறுதியாய் வாசித்துப் பொருளுணர்ந்து அதில் காணும் சொற்கள் இப்போதுள்ள திராவிட மொழிகளின் மூலமொழியைச் சார்ந்தன என்று தெளியப்பட்ட பின்புதான் நிச்சயம் எய்தும். ஆகவே, ரெவரென்ட் ஹீராஸ் செய்வதுபோல அச்சொற்கள் பழந்தமிழுக்குரியன என்று கொண்டு பழந்தமிழாக வாசித்தல் பொருத்தமற்றதாம். அவர் செய்துள்ள முயற்சி மொழி - நூல் முறையோடு முற்றும் முரண்பட்டதாம்; சிறிதும் அங்கீகாரத்திற் குரியதன்று.

இங்கே பேராசிரியர் எஸ். கே. சட்டர்ஜீ தமது 'இந்தோ-ஆரிய மொழியும், ஹிந்தி மொழியும்' (Indo-Aryan and Hindi) என்ற நூலில் வெளியிட்டுள்ள கருத்தையே நான் பின்பற்றியுள்ளேன். அவர் கொண்ட கொள்கை பெரும்பாலும் உண்மையென்றே தோன்றுகிறது. சிந்துநதிப் பிரதேசத்து நாகரிகம் திராவிடர்களுக்குரியதுதான் என்று எக்காலத்தாவது தெளிவிக்கப்படுமாயின், அதனுல் ஏற்படும் விளைவுகள் மிகப் பலவாம். சரித்திர நோக்கே முற்றும் மாறுபட்டுவிடும். நம்மை எதிரிடும் கேள்விகளும் புரட்சித் தன்மையுடையனவாயிருக்கும். ஆகவே, திராவிட மொழிகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நமக்கு மேற்குறித்த முடிவைக் காணுதற்குத் துணை செய்ய வேண்டும் கடமையிருக்கிறது. அதுபற்றிய ஒரு விஷயத்தை இனி அடுத்துப் பேசுகிறேன்.

திராவிடமொழியைப் புனர் நிர்மாணஞ் செய்வதற்கு அடிக்கடி முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. எனது நண்பர்

வங்கடராஜுலு ரெட்டியார் இந் நிர்மாணத்தைக் குறித்துச் சில கருத்துக்கள் வெளியிட்டிருக்கின்றனர். இந்தோ-ஐரோப்பிய மொழிகளை எடுத்துக்கொண்டால், ஒப்புநோக்கு ஆராய்ச்சி அவற்றில் மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது. எனினும், பூர்வ மொழியின் புனர்நிர்மாண முயற்சி அவைகளில் கூடத் திருப்திகரமாயில்லை. பேராசிரியர் பீடெர்ஸென் (Prof. Pedersen) மொழியாராய்ச்சி முறைபற்றிய தமது நூலில் இதனை விளக்கமாகக் காட்டியிருக்கின்ருர். நம்முடைய திராவிடமொழிகளிலோ, ஒப்புநோக்கு மொழியாராய்ச்சி இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறது. ஒப்புநோக்குச் சொல்-அகராதிகூட இன்னும் திருந்த அமைந்தபா டில்லை. மொழிக் கல்வியில் ஆழ்ந்து சிறந்துள்ள எனது நண்பர் கே. ராமகிருஷ்ணய்யா இப்பொழுதுதான் திராவிடமொழிகளிலுள்ள கிளைச் சொற்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர். இத் தொகுப்பு நூலில் கிளைச் சொற்கள் அனைத்தும் காட்டப்பட்டுள்ளன என்று நினைத்தற்கு இடமில்லை. கிளைமொழிச் சொற்களையும் ஒப்புநோக்குச் சொல்லகராதியையும் நன்கு கற்றுணர்ந்து ஒலியிலக்கண விதிகளை நிருமித்தல்வேண்டும். அதன்பின்புதான், ஒப்புநோக்கு மொழிநூலாராய்ச்சி செய்தல் இயலும். கன்னடமொழியில் ராவ்பகதூர் ஆர். நரசிம்மாச்சாரியாரும், தெலுங்கில் டாக்டர் நாராயணராவும் இத் துறையில் உழைத்திருக்கின்ருர்கள். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், எல். வி. இராமசாமி ஐயர் முதலியோர் இத்துறையில் தமிழ்பற்றியும் மலையாளம்பற்றியும் நல்ல பணி செய்திருக்கிருர்கள். மொழியாராய்ச்சி முறையில் நன்கு பயின்ற நமது அறிஞர்களே இத்துறையில் பணிசெய்வதற்குத் தகுதியுள்ளவர்கள். ஆனல், திராவிடமொழிகள் பலவற்றிலும் வல்ல அறிஞர்களின் கூட்டுறவினலேயே இப்பணி முற்றக்கூடியது. இவ்வகையான கூட்டுறவிற்குச் சென்னை ஸர்வகலாசாலையில்தான் தக்க வசதியுள்ளது. ஆங்குள்ள அதிகாரிகள் இக் கூட்டுறவுப் பணி நிகழ்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். இந்த ஸர்வகலாசாலையிலுள்ள மொழி-அறிஞர்கள் இத்துறையில் சிறிது உழைத்து வருகிருர்கள். இவ்வுழைப்பை முறையாகவும் விரைவாகவும் செய்து மொழியாராய்ச்சியில் கைக்கொள்ளத்தகும் நெறிகளை வழுவாது பின்பற்றி முற்றுவிக்கவேண்டும். இவ்வகையான ஆராய்ச்சி நிகழ்ந்தபிற்பாடுதான் மூலத் திராவிட மொழியின் புனர்நிர்மாணம் செய்தல் இயலும். இதற்குப் பிற்பாடு

தான் மொஹஞ்சொதரோவிலுள்ள லிபியால் குறிக்கப்படும் மொழி மூலத்திராவிட மொழியோடு தொடர்புடையதுதானு என்று அறிதல் கூடும். தொடர்பு உண்மையாயின், திராவிடர்களுடைய ஆதி நாகரிகம் முற்றும் உண்மையாய், அதன் தொன்மை இரண்டு அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாய் முடியும்.

திராவிடமொழி அறிஞர்கள் ஒத்துழைக்கவேண்டிய வேருெரு துறையை இறுதியில் கூறுவதாக வைத்திருந்தேன். அது தான் இலக்கணத் துறை. இதில் வரலாற்றுமுறை இலக்கணம், ஒப்புநோக்கு இலக்கணம் என்ற இரண்டும் அடங்கும். வரலாற்றுமுறை இலக்கணம் பற்றி, பேராசிரியர் A. R. ராஜராஜ வர்மாவின் கேரளபாணினீயத்தைத் தவிர, இதுவரை வேறு நூல்கள் இயற்றப்படவில்லை. இவ் இலக்கண வகையின் இயல்பைக் குறித்து ஓர் ஆசிரியர் கூறுவது நோக்கத்தக்கது: 'தற்காலத்துள்ள மொழிவழக்குக்களை எடுத்துக்கொண்டு மொழியாராய்ச்சியாளன் அவ் வழக்குக்கள் வந்த வரலாற்றை ஆராய்ந்து காண முயலுகிருன். அவ்வகை ஆராய்ச்சியில் மொழிகள் எப்பொழுதும் மாறிக்கொண்டே செல்லுகின்றன என்ற உண்மையை அவன் காணுகிருன்...இங்ஙனமாக, மொழியின் சரித்திரம் விளக்கம் எய்துகின்றது. முடிவில், அது அதன் பிறப்பிலிருந்து நாளிது வரைப் பல்வேறு கிளைகளாய்ப் பிரிந்து வளர்ந்துவந்த நெறியைத் தெரிந்துகொள்ள இயலுகிறது. இவ்வாறு அறியும்படி செய்வது தான் வரலாற்று நெறி இலக்கணத்தின் இயல்பாகும்.' பற்பல காலங்களிலும் எழுதிய இலக்கணங்களை மட்டும் கற்ருல் போதாது. நமது பண்டை இலக்கணங்கள் வடமொழி யிலக்கணங்களைப் பின்பற்றியுள்ளன. நமது மொழியிலுள்ள இயல்புகள் அனைத்தையும் கண்டு இலக்கணம் வகுத்துள்ளார்கள் என்று கூறமுடியவில்லை. நமது மொழியின் அமைப்பினையும் முற்றக் கண்டு இலக்கணம் செய்யப்பட்டுள்ளது என்றும் நினைக்கக்கூடவில்லை. நாம் பல்வேறு காலத்தில் தோன்றிய இலக்கியங்களையும் சரித்திரமுறையில் வைத்துக் கற்றல்வேண்டும். அவற்றிலே காணப்படும் மொழிவழக்கின் விதிகளைக் கண்டு கொள்ளுதல் வேண்டும். பின், ஒவ்வொரு காலத்திற்கு முரிய நியதி அல்லது விவரண இலக்கணம் (Systematic or descriptive Grammar) இயற்ற முற்படுதல் வேண்டும். இம்முயற்சியில் நமது பண்டை இலக்கணங்கள் நமக்கு உபகாரப்படும் என்பதில் தடையில்லை.

நமது முன்னோர்கள் வழக்குநெறியில் மொழி எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கும் என்ற உண்மையை நன்கு உணர்ந்து கொள்ளவில்லை. உதாரணமாக, இன்று வழங்கும் தமிழ் சங்க காலத்துத் தமிழும் அன்று, வள்ளுவர் காலத்துத்தமிழும் அன்று; இவ்விரண்டினின்றும் வேறுபட்டது. இதனை மறந்து, அவர்கள் வற்புறுத்திய விதிகள் மொழிவளர்ச்சியைத் தடுக்க முயன்றன. நமது முயற்சியில் அவ்வகைக் குற்றம் இருத்தல் கூடாது. மேற் குறித்தபடி அமைத்த விவரண இலக்கணங்களைக் கால அடைவில் வைத்துக் கற்று, அக்கல்வியின் விளைவாக வரலாற்று முறையிலக்கணம் இயற்றுதல் வேண்டும். எஸ்பெர்ஸென் கூறிய வார்த்தைகள் இங்கே பொருத்தமுடையன. "சென்ற நூறு ஆண்டுகளாகச் செய்துவந்த மொழி நூலாராய்ச்சியில் ஒரு தனிப்பட்ட பெருமை ஏற்பட்டிருக்கிறது. அது பழைய முறைகளை விடுத்து வரலாற்றுமுறையில் இலக்கணம் செய்ததேயாகும். இவ் வரலாற்று இலக்கணத்தில் மொழியின் வழக்காறுகளை விவரிப்பதோடு அவற்றிற்குரிய காரணங்களும் விளக்கம் எய்தின. இப் புதுமுறையைக் கையாளுவதினாலே தனித்தனி காணப்பட்ட இலக்கண நியமங்கள் ஒன்றோடொன்று தொடர்பு உடையன வாய்ப் புது முடிபுகளை நாம் கொள்ளுதற்கு உபகாரப்பட்டன" என்றனர் இப் பேராசிரியர். வரலாற்று நெறியில் தக்கதொரு இலக்கணம் அமைக்கப்பெற்றிருக்குமாயின், பூர்வ எகிப்துதேசத்தில் 1500 ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்டதாகக் கருதும் 'சாந்திக் காப்புவாய் ஏமாந்து இருக்கார்'' (இந்து, 13—10—46) என்பதுபோன்றவாக்கியம் அமைய முடியாதென்பது விளங்கும்.

இத் துறையின் மற்றொருபகுதி ஒப்புநோக்கு இலக்கணமாகும். இதில் வரலாற்று முறையில் கிடைத்த சான்றுகள் மூல மொழியிலிருந்து கிளைத்த பலவேறு மொழிகளையும் இணைத்து நோக்கிப்பெற்ற ஆதாரங்களால் நிறைவுறுகின்றன. கால்டுவெல் ஆசிரியரது திராவிடமொழியின் ஒப்புநோக்கு இலக்கணமே இத் துறையிற் சிறந்த தனியிலக்கணமாக விளங்குகின்றது. இவ் ஆசிரியரால் திராவிடமொழி ஆராய்ச்சி உண்மையாகவும், திண்மையாகவும் அடிகோலப்பட்டுள்ளது. திராவிட மொழிகளுள் ஏதேனும் ஒன்றை நன்கறிய வேண்டுமாயின், அதற்குப் பிற திராவிட மொழிகளின் உணர்ச்சி இன்றியமையாது வேண்டப்படுமென்று இவ் ஆசிரியர் உறுதியாக நம்பினர். ஆகவே ஒப்புநோக்கு-இலக்கணம் ஏதோ ஒரு வகையாற் பயன்படுமென்று நெகிழ்ந்து சொல்

ளுதல் சரியன்று என்றும், அது இன்றியமையாத ஒரு பயிற்சி என்றும் அவர் கொண்டனர். மிகவும் நன்றாகத் தொடங்கி அவர் செய்துவந்த மொழி யாராய்ச்சிப் பணியை அவரைப் பின்பற்றி ஒருவரும் தொடர்ந்துசெய்யாமை பெரிதும் வருந்தத்தக்கது. இப்பொழுதாவது தக்க அறிஞர் யாவரேனும் அப் பணியைச் செய்ய முற்படுதல்வேண்டும். 1875-ல் கால்டுவெல் ஐயரின் ஒப்புநோக்கு இலக்கணத்தின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. அக்காலத்திற்குப்பின், மொழி ஆராய்ச்சி செய்யும் முறை பலபடியாகத் திருத்தம் பெற்றிருக்கிறது. தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலிய முக்கியமான நூல்கள் நன்றாகப் பதிப்பிடப்பெற்று வெளிவந்திருக்கின்றன. கல்வெட்டுச் சாஸனங்கள் நூற்றுக்கணக்காக வெளிவந்துள்ளன. தேச சரித்திர உணர்ச்சியும் மிகவும் பெருகியிருக்கிறது. அறிஞர்கள் பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்து நம் அறிவைப் பெருக்கியிருக்கிறார்கள். பிற திராவிட மொழிகளிலும் இங்ஙனமே அறிவு பெருகி வளர்ந்திருக்கிறது. இவ்வாறு பெருகியுள்ள அறிவை ஒப்புநோக்கு இலக்கணங்களுள் பயன்படுத்தவேண்டுவது மிகவும் அவசியம். இவற்றைநோக்குமிடத்து கால்டுவெல் ஆசிரியரது நூலை நன்கு புதுக்கி எழுதுதல் எத்துணை அவசியம் என்பது புலப்படும். உண்மையில், இங்ஙனம் புதுக்கிய நூல் வெகுகாலத்திற்கு முன்னரே இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும்.

தமிழ் நாட்டில் சென்னையிலும், அண்ணாமலையிலும் இரண்டு ஸர்வகலாசாலைகள் உள்ளன. தெலுங்கு நாடு, கன்னட நாடு, மலையாள நாடு, இவை ஒவ்வொன்றிலும் ஒரு ஸர்வகலாசாலை இருக்கிறது. இந்த ஸர்வகலாசாலைகள் அனைத்தும் திராவிட மொழிபற்றிய ஆராய்ச்சிகளில் கூட்டுறவுசெய்து உழைத்துவரக் கூடுமாயின், அது மிகவும் பயன் தரத்தக்கதாம்.

எனது தலைமையுரை முடிவுறுகிறது. திராவிட மொழிகளிலும், திராவிட இலக்கியங்களிலும் ஆராய்ச்சி செய்யவேண்டும் துறைகளை விளக்குவதும் ஆராய்ச்சித் துறைகளின் பரப்பைத் தெரிவிப்பதும், முக்கியமான துறைகளை எடுத்துக்கொண்டு நாம் செய்துள்ளனவற்றையும், இனிச் செய்யவேண்டுவனவற்றையும் புலப்படுத்துவதும் எனது நோக்கமாம். நான் தெரிவித்தவற்றில் குறைபாடுகள் இருக்கலாம்; அவற்றைப் பொறுக்க வேண்டுகிறேன். இதுகாறும் கூறியவற்றைப் பொறுமையோடு கேட்ட உங்களுக்கு என் நன்றி உரித்தாகும். திராவிட அறிஞர்கள் இம் மகாநாட்டிற்குப் பெருந் திரளாக வந்திருப்பார்களாயின், அது

நலம் பயப்பதாயிருக்கும். ஏனெனின், பிற பல துறைகளில் ஆராய்ச்சி செய்துவரும் நிபுணர்களுடன் கூட்டுறவுகொள்ளுதல் இன்றியமையாத ஓர் செயலாகும்.

அன்பர்களே, திராவிட அறிஞர்களென்று இப்பொழுது கூறினேன். இத் தொடரால். தூய ஆரியர்களின்றும் பிரித்துத் தனியாக இக்காலத்துக் காணக்கூடிய தூய திராவிடர்களை நான் இங்கே குறிப்பதாகக் கொள்ளுதல் கூடாது. சரித்திரத்திற்கு எட்டாத காலத்தில் இருந்ததாகக் கொள்ளும் ஒரு கருத்துப் பொருளை எளிதில் உணர்த்துவதற்கென்று அமைந்த குறியீடுகளே திராவிடர், ஆரியர் என்ற இரண்டு சொற்களும். மக்கள் இனப் பகுப்பில் தூய்மை என்பது எக்காலத்தும் இல்லை. சென்ற காலத்தை நிகழ் காலத்தோடும், இறந்ததை உயிருள்ளதனோடும், நாம் மயங்கி உணர்தல் கூடாது. நாம் அனைவரும் திராவிட மொழி மாணவர்கள். திராவிட மொழியையும், இலக்கியங்களையும், நாகரிகத்தையும், பண்பாட்டினையும் ஆராய்ச்சி செய்துவருகிறோம். நம்மைப்போலவே இங்கே ஆரிய மொழி மாணவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் ஆரிய மொழியையும், இலக்கியங்களையும், நாகரிகத்தையும், பண்பாட்டினையும் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். ஆரிய நாகரிகமும், தமிழ நாகரிகமும் மிகமிகப் பண்டைக் காலத்தில் தானே ஒன்றாகக் கலந்துவிட்டன. இப்பொழுது நாம் கொண்டிருப்பது கலப்பு நாகரிகமும் பண்பாடுமேயாகும். இங்ஙனமே, மொழியை எடுத்துக் கொண்டாலும், அதில் தூய்மை என்பது கிடையாது. நம் மொழிகளில் பல வேறு வகைப்பட்ட கூறுகள் கலந்துவிட்டன. ஆகவே 'தூய தமிழ்' என்று கூக்குரல் இடுதல் மொழி வரலாற்று உண்மைக்கு மாறானதாகும். மேற்குறித்தபடி வரலாற்று நெறியில் நாம் நோக்கிவந்தால், உண்மையைக் காணுதற்கு இன்றியமையாததான நடுவுநிலை நமக்கு ஏற்படும். இந் நடுவு நிலையைத்தான் விஞ்ஞான நூலோர் பெரிதும் போற்றுவது. நாம் அனைவரும் நடுவுநிலையில் நின்று ஒருவரோடொருவர் ஒத்துழைத்து வருவோமாக. உண்மை ஒன்றே நமது தனிப் பெரு நோக்கமாக விளங்குக. நாம் எடுத்துக்கொண்ட துறைகளில் இடைவிடாது உண்மையோடு உழைத்து மக்களின் அறிவுச் செல்வத்தை வளர்ப்போமாக. நமது மாட்சிமிக்க தாய் மொழிகளுக்கு உண்மைத் தொண்டர்களாக இருப்போமாக. நாம் பாரதமாதாவின் உத்தம மக்களாக அமைவோமாக. இக் கொள்கையுடையராய் நம்மவர்கள் இனைத்துச் செழிக்கும்படி இறைவன் அருள் புரிக!

END